தென்மொழி

தமிழ்ச் சங்கம் தோற்றுவித்துத்
தமிழ்த் தழுக்கை அடிக்கின்றார்!

தமிழ்வளர்ச்சித் துறையும்தமிழ் அகரமுத லித்துறையும்
தமிழ்ப்பல்க லைக்க ழகமும்,
தமிழ்ப்பண்பாட் டுத்துறையும், உலகத்தமிழ் ஆராய்ச்சி
நிறுவனமும் - அறுக்க மாட்டான்
இமிக்ழ்கின்ற அரிவாள்ஆ யிரம்இடுப்பில் செருகினாற்போல்
இருக்கின்ற நிலையில், உலகத்
தமிழ்ச்சங்கம் தோற்றுவித்துத் தமிழ்த்தழுக்கை அடிக்கின்றார்,
தமிழரசார்; வியப்பென் சொல்வோம்!

எதனாலே தமிழ்வளரும் எவராலே தமிழ்மீளும்
என்றுணரும் மதுகை யற்றார்
இதனாலே தமிழ்வளர்ப்போம் என்றுலகத் தமிழ்ச்சங்கம்
எழிலுறவே இமைப்பத் தோற்றி,
அதனாலே பகற்கொள்ளை அடித்திடவும் முனைந்திட்டார்
அறிஞரென அமர்ந்தும் கொண்டார்!
பதனீரால் பனைவெல்லம் காய்ச்சுதல்போல் காய்ச்சுவரோ,
பைந்தமிழை? - விளைவென் பார்ப்போம்!

நார்நாராய்த் தமிழ்கிழிக்கப் போகின்றார், நம்புலவர்!
நந்தமிழும் வாழ்ந்த திங்கே!
ஊர்ஊராய்ப் பாட்டரங்கம் பட்டிமன்றம் கருத்தரங்கம்
எனும்பெயரில் உளறல் கேட்கப்
பேர்பேராய்ச் சுவரொட்டி பேரளவில் அச்சடித்துப்
பெரும்புரட்சி செய்வார் போலும்!
யார்யாரோ அழித்ததமிழ் இன்னவரால் திரண்டுருண்டு
யாப்புறவே வளரும் காணீர்!

உலகமெலாம் தமிழ்செழிக்கச் செய்வரினி; உலகிலுள்ள
ஒண்தமிழர் ஒன்று கூடி
முலமுலென முன்னேறப் போகின்றார்; முதலமைச்சர்
முனைந்துவிட்டார் தமிழவ ளர்க்க!
கலகமென ஒன்றில்லை; அழிவில்லை தமிழர்போய்க்
கூலிகளாய்க் கருகும் நாட்டில்
பொலபொலென அடடா ஓ! தமிழ்ப்பொழுது விடியுமிங்கே!
திறந்திருங்கள் பொக்கை வாயை!

சுவடி: 22
ஓலை: 6
ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்
விலை
உருபா 1-25

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1155 : அன்புமிக்க ஐயா, வணக்கங்கள். இடர்ப்பாடுகளைக் கண்டு சோர்ந்திட வேண்டா. உறுதி மனத்துடன் செயல்படுங்கள். எதைக் குறித்தும் கவலற்க. உடலால் உதவி செய்ய முடியாவிட்டாலும், உள்ளத்தாலும் பொருளாலும் தங்கள் தோள்களை வலுப்படுத்த என்போன்ற இளம் அரிமாக்கள் அணியமாக உள்ளோம். பணியிடையேயும், தங்கள் உடல் நலத்தையும் நன்கு பேணுக. கோடைக்காலம்! எனவே, இடைவிடாத பயணத்தைத் தவிருங்கள். குளிர்ந்த குடிப்புகள் அருந்துங்கள். நாடோறும் இரு எலுமிச்சையாவது பிழிந்து குடியுங்கள். மே மாதம் தங்களைச் சந்திக்க முயல்வேன். அன்பு மகன்,

—தானியேல் செபராசு, கோப்பா (ம.பி.)

0 : 1156 : அன்புகெழுமிய ஐயா! தென்மொழி சுவடி 22' ஓலை 5-இல் வந்த, 1144 ஆம் எண்ணுள்ள மடலில் பேராசிரியர் ஒருவர் சீர்திருத்த எழுத்தில் இதழ்களை வெளியிடக்கோரியும், வெளியிடாமை குறித்து மனக்குறை கொண்டிருப்பதாகவும் எழுதியுள்ளார்.

மொழிக் கருத்தில் நமக்குப் பெரியார் அவர்களுடன் உடன்பாடில்லை. உரோமானிய முறையில் எழுதும் அச் சீர்திருத்த எழுத்தில் பல சிக்கல்கள் உள்ளன.

நெடில் எழுத்துகள் அனைத்திற்குமே ஒரே குறியைக் கண்டு பிடிக்கவேண்டும்.

(ஒ-ம) 'கா' எனில், 'க' என எழுதிப் பின்னர் 'ா' என எழுதுகிறோம். 'மூ' எனில், 'மு' என எழுதி, ஒரு மேற் சுழியை மட்டும் போட்டு விடுகிறோம். அதே 'ஊ' வரிசையில் வரும் 'தூ' என்ற எழுத்திற்கு 'து' என எழுதி, 'ா' என எழுதவேண்டியுள்ளது. இதை அவருக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மேலும், பிழை மலிந்த புதுக் கவிதைகள்-தாங்கள்-இவற்றை நிறை (Review) செய்து எழுதத் தென்மொழியில் பல பக்கங்களை வீணாக்கவேண்டாம். அவற்றைத் திருப்பி அனுப்பிவிடுங்கள். எத்தனையோ இதழ்கள் இருக்கின்றனவே! அன்பன்,

— மா. இலக்குவன், புதுக்கோட்டை

0 : 1157 : பாவாணர் வழி நின்று, பைந்தமிழ் வளர்க்கும் தென்மொழித் தலைவரே வணக்கம்.

கடந்த கிழமை, அமரர் பூண்டிக் கிளை நூலகத்தில், "தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் நூல் எடுத்துப் படித்தேன். இதன் ஆசிரியர் பேரா. மு. சு. அருள்சாமி, க.மு. அவர்கள். அது பற்றி இச் சிறுவன் வரையும் மடல். பிழை காணின் பொறுத்தருள்க! அதில் ஆறு பிரிவுகள், ஆறாம் பிரிவு 12 சிறு பிரிவுகளுடன் "தற்காலம்" எனும் தலைப்பில் உள்ளது. அதில் தற்காலத்தில் தமிழ், மொழி, இன, நாட்டு உணர்வாளர்கள், இதழ்கள், பாவலர்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவளம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி த. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், தென்மொழி வேலு, கதிர்மதியன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.) தொலைபேசி 847829

சுவடி: 22] ௨௦௧௭ மேழம் (ஏப்ரல்-மே - 1986 [ஓலை-6

பிரபாகரன் சிந்திக்கவேண்டும்!

நான்கு எருதுகளும், ஓர் அரிமாவும்' (சிங்கமும்) என்னும் கதையை நான்காம் வகுப்பிலேயே படித்திருப்பார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன். ஓர் ஆண்டுக்கு முன்னர்தான் (10 4 85 - இல்) தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கமும் (L.T.T.E.), தமிழீழ விடுதலை அமைப்பும் (TELO), ஈழ மக்கள் புரட்சி விடுதலை முன்னணி (EPRLF)யும், ஈழப் புரட்சி அமைப்பும் (EROS) ஒன்றிணைந்து ஈழத்

தேசிய விடுதலை முன்னணி, (ENLF) என்னும் அமைப்பு ஒன்றை உருவாக்கிக்கொண்டு, சிங்கள வல்லதிகார அரசுக்கெதிராகவும், அடித்து நொறுக்கியும், சுட்டுப் பொசுக்கியும் அழிக்கப்பட்டு வரும் தமிழீழத் தமிழர்களின் விடுதலைக்குச் சார்பாகவும், தங்கள் ஆற்றல் போர்த்திறன், வீரம் அனைத்தையும் ஒருமுகமாகப் பயன்படுத்துவது என்று உறுதி கொண்டனர். அவர்களுக்கெல்லாம் இணையாகவும், இன்னும் சொன்னால் கூடுதல் வலிவும், சிறந்த போர்த் திறமும், துணிவும், மக்கள் நலமும், தொலை நோக்குடன் திட்டமிட்ட செயலமைப்பும் ஒருங்கே கொண்ட உமா மகேசுவரனின் (முகுந்தனின்) இயக்கமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) அவர்களுடன் இணைக்கப்பெற்று அவ்வமைப்பு முழுமைப் பெறவில்லையானாலும், ஏதோ ஒருவகையில் ஓர் ஒற்றுமை அமைப்பு உருவாகியதே என்று, தமிழீழம் அமையவேண்டும் என்னும் கவலைகொண்டிருக்கும் உலகத் தமிழின மக்களும், தமிழகத் தலைவர்களும் ஓரளவு மகிழ்ச்சியோடிருந்தனர்.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராளிகள் ஒற்றுமைப்பட்டதாகவும், ஒருங்கிணைந்து போராடுவதாகவும் அறிவித்தார்களே தவிர, செயலில் அவ்வாறு இயங்காதிருந்தது அவர்களின் இணைவால் மகிழ்ச்சியடைந்தவர்களுக்கு ஓர் ஆற்றொணா வருத்தத்தையும், நம்பிக்கையின்மையுமே தந்து கொண்டிருந்தது.

தம்பி பிரபாகரனும், தம்பி உமா மகேசுவரனும் அவர்களை நம்பியிருந்த விடுதலைப் போராட்டத் தொண்டர்களும் தமிழீழம் பெறுவதைத் தங்கள் வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டு ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இத் தமிழ் மண்ணில் அடியெடுத்து வைத்த தொடக்க ஆண்டுகளில், 'தென்மொழி'யே அவர்களுக்கு வரவேற்பு இல்லமாகவும், உணர்வூட்டிக்கொள்ளும் பாசறையாகவும் அமைந்திருந்தது. இன்று அவர்களின் போராட்ட முயற்சிகளையும், வீரச் செயல்களையும் தங்கள் தங்கள் அரசியல் வளர்ச்சிக்கும்; பொது நல மேம்பாட்டிற்கும் உறுதுணையாகவும், உற்ற கருவியாகவும் பயன்படுத்திக் கொண்டு வருகின்ற சிறிய-பெரிய தலைவர்கள் சிலருக்கும், தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்பில் வந்து தங்களைப் புதிதாக இணைத்துக்கொண்ட போராளிகள் பலருக்கும் தெரிந்திருக்காது! சிலர் தெரிந்திருந்தாலும், அவ் வுண்மைகளை வெளிப்படுத்தித் தங்கள் வாய்ப்புகளையும், வளர்ச்சிகளையும், புதிய மதிப்புகளையும் குறைத்துக்கொள்ள விரும்பாமல் இருப்பார்கள்.

ஆனால், இந் நிலைகளெல்லாம், அன்றைய காலக் கட்டத்தில், ஒவ்வொரு நாள் காலையிலும்-மாலையிலும்-இரவிலும் தென்மொழிப் பாசறைக்கு வந்து தங்கள் போராட்ட முயற்சிகளை வளர்த்தெடுத்துக் கொண்ட விடுதலை இயக்கத் தலைவர்கள் பிரபாவுக்கும், அவர்களுடன் அன்று மிகவும் நெருக்கமாக இருந்து செயற்பட்ட முன்னணிச் செயல் மறவர்களுக்கும், இன்னும்

இன்று போராட்டக் களத்தில் நேரடியாக இப் போராளிகளைப் போல் குதித்துப் போராடாமற் போயினும், தங்கள் தங்கள் நிலைமைக்கும், தகுதிக்கும், உணர்வுக்கும் தமிழீழ விடுதலை ஈடுபாட்டுக்கும் வாய்ப்பு வசதிகளுக்கும் ஏற்ற வகையில் மிக அணுக்கமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் திருவாளர்கள் ; அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசியார், யோகேசுவரன் இணையர், சந்திரகாசன், ஈழவேந்தன், கோவை-மகேசன், காசி ஆனந்தன், சேரனுதி இராசா, இரத்தின சபாபதி, காரு பொ. இரத்தினம் முதலியவர்களுக்கும் மறந்து போயிருக்காது என்று நம்புகின்றோம்; அவர்கள் மறந்திருந்தாலும் கூட, அது தமிழினத்தின் இயல்பான வீழ்ச்சிக்கான குணம் என்று கருதுவோமே தவிர, நன்றி மறந்த செயலாக என்றுமே கருதி வருந்தமாட்டோம்; ஏனெனில், நன்றியை எவ்வளவியும்-எதிர்பார்த்தும் என்றுமே நாம் செயல்பட்டதில்லை. இவற்றைக்கூட தம்பி பிரபாகரனின் அன்பு மறந்த வீர உள்ளத்திற்கு நினைவூட்டுவதற்காக அப்படியொரு கட்டாயத் தேவைக்காகக் கூறினேமே தவிர, எவ்வகையான—ஓர் எள்வின் மூக்கத்துணைப் பெருமைக்காகவும் அன்று என்பதை எம்மை நன்கு அறிந்த தென்மொழி உள்ளங்கள் தெளிவாக அறியும். இவை நிற்க.

இக் கட்டுரை எழுதுவதற்கு ஓரிரு நாள்களுக்கு முன்பிருந்தே எம் உள்ளத்தில் ஒரு பேரவலமும், பேரச்சமும் குடிகொண்டிருக்கிறது. அது, தம்பி பிரபாகரனின்-அவர் இயக்கத்தின் அடாவடியான நடவடிக்கையால் ஏற்பட்ட ஒரு விளைவாகும். ஆம்; அவர் அவருடன் உளமுவந்து ஒன்றிணைந்த போராட்ட இயக்கம் ஒன்றின் தலைவர் சிறி சபாரத்தினத்தைச் சுட்டு வீழத்தியதாகும். அவ் வீரமகனின் நெஞ்சில் ஊடுருவிய துமுக்கிக் குண்டு, நம் நெஞ்சில் வந்து தங்கிவிட்டது போலும் ஓர் உணர்வு நம்மை ஆட்கொண்டு உள்ளது.

இது நிகழ்ந்திருக்கவே கூடாத ஒரு கொடிய நிகழ்ச்சி, தம்பி பிரபாகரனின்மேல் நமக்கிருந்த நம்பிக்கையும்-மதிப்பும் என்றுமே குறைந்தது இல்லை. அவரும், தம்பி உமாவும், திருவாளர்கள் : அமிர்தலிங்கம் இணையரும் இறுதியாக நம் வீட்டில் நம்முடன் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த அந்நாளில் கூட, அவர் நம்மிடம் ஆற்றாமையாக, ‘ஐயா, உமா மகேசுவரனுக்குக் கொடுக்கும் ஆதரவு போல், நீங்கள் எங்களிடம் காட்டுவதில்லையே, ஏன் !'' என்று கேட்டதற்கு, ‘தம்பி, அப்படிக் கருதுவது தவறு. தமிழின மீட்கியில் முதலாவது குறிக்கோளாகத் தமிழீழம் பெற வேண்டும் என்னும் முயற்சியில் யார் யார் ஈடுபட்டிருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்குமே நம் ஆதரவு பொதுவானது. இதில் வேறுபாட்டுக்கே இடமில்லை. இவ் வுண்மை தொடக்க நாளிலிருந்து நம்முடன் பழகும் உங்கள் அனைவருக்குமே தெரியும். ஒரேயொரு வேறுபாடு உண்டு. உமா அன்றிலிருந்து இன்று வரை நம்மிடம் வந்து போய்க்கொண்டிருக்கிறார். நீங்கள் தாம் வருவதைப் படிப்படியாய்க் குறைத்தும், இறுதியில் தவிர்த்தும்

கொண்டீர்கள். எனவே, உங்கள் உள்ளத்திற்கு என் ஈடுபாடு வேறுபாடாகப்படுகிறது, வேறொன்றுமில்லை" என்று கூறினோம்.

இதையும் இங்கெதற்காக எடுத்துக் கூறுகிறோம் எனில், அன்றிலிருந்து இன்றுவரை, விடுதலைப் போராளிகளை நாம் வேறுபாடாகவே கருதுவதில்லை. பிறரைப்போல் வெளிப்படையாக, ஒரு சார்புணர்வு கொண்டு எழுதுவதுமில்லை. எவ்வாறேனும் தமிழனுக்கென்று ஒரு தனிநாடு இவ்வுலக உருண்டையில் கட்டாயம்-அதுவும் விரைந்து உருவாகவேண்டும் என்பதும், அதுவும் தமிழீழத்தில்தான் அந் நல்வாய்ப்பும் சூழலும் முதலில் ஏற்பட்டுள்ளதால்-அதற்கு முழுமூச்சுடன் துணை நிற்கவேண்டும் என்பதும் நம் அசைக்கமுடியாத கோட்பாடும் நம்பிக்கையும் முயற்சியும் ஆகும். அவ்வாறான ஓர் உள்ளத்தில் என்றென்றும் பசுமையாகக் குமிழியிட்டுக் கொண்டிருக்கும் அன்புடன்தான், தம்பி பிரபாவுக்கு இதை எழுதுகிறோம்.

அவர் அண்மையில் எடுத்துக்கொண்ட, கொலை முயற்சி ஓர் உள்ளழிப்பு முயற்சியே ஆகும் என்பதைத் தெளிவாக உணர வேண்டும். புறப் பகையும் பொதுவான எதிரியும் வலிவாக வளர்ந்திருக்கும் இக் காலக் கட்டத்தில், நம் ஈடிணையற்ற கொள்கைக்கென நம்முடன் துணையாக நின்று இயங்கும் ஒரு சிறு அணுவும்-துணுக்கும்-துரும்பும் கூட நம்மால் அழிக்கப்பட்டுவிடக் கூடாது. போராளிகளின் போர்த்தந்திர முறைகள், உத்திகள், படை வகுப்புகள் (வியூகங்கள்) போன்ற அணுகுமுறைகள் யாவையாயினும், அவை ஒருமுகமான உணர்வுடன் பகையின் மீதுதான் கொண்டு செலுத்தப்பட வேண்டுமே தவிர, நம் இனத்தின் பக்கம் இன்னும் சிறப்பாகச் சொன்னால் நம் முனைப்பின் பக்கம், அஃதாவது நம்மோடு தோளோடு தோளாக நின்று இயங்கும் நம்மவர் பக்கம் (அவர் எத்தனைக் குற்றங்கள் செய்தவராக அல்லது செய்பவராக இருந்தாலும், அக் குற்றங்கள் நம்மை நோக்கியே செய்யப்பட்டிருந்தாலுமே கூட) திரும்பவே கூடாது என்பதை தமிழீழத்திற்காகத் தங்கள் உயிர்களைத் தூசாக எண்ணிப் போராடும் போராளிகளுக்கு, குறிப்பாகத் தம்பி பிரபாகரனுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். நம் ஆற்றல் முழுவதும் எதிரியின் அடித் தளத்தையே தகர்க்கின்ற வகையில் செலவிடப்பட வேண்டுமே தவிர, நம்மையே நோக்கிய தற்கொலை முயற்சிகளில் அது செலுத்தப்படக் கூடவே கூடாது.

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. (852)

என்பார் நம் முன்முதல் இனக்காப்பாளரான திருவள்ளுவப் பேராசான்.

இதன் பொருள் "நம்முடைய ஒற்றுமையையே தகர்த்துப் பிளவையே கருதி நம்மில் ஒருவன் நமக்கு வெறுப்பனவற்றைச் செய்வானாயினும், அவனோடு மாறுபாடு கொள்ளாமல் இருப்பதும் அவ

னுக்கு அழிவைச் செய்யாமலிருப்பதும், தலையாய கோட்பாடு ஆகும்'' என்பது. இக்கருத்து இன நல முயற்சிக்குப் பயன்படும் தலையாய உள்ளிப்பாகும்.

அடுத்து, இன்னொரு கருத்தும் கவனிக்கத் தக்கது.

ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. (886)

இதன் பொருள், 'பகையானது, ஒன்றாக இணைந்தவர்களுக்குள்ளேயே தோன்றுமாயின், அழியாமை நிலைப்பது கடினம். அஃதாவது நாம் படிப்படியாக அழிந்து படுவோம்' என்பது. இதுவும் நம் முதுமொழி ஆசான் அவர்களின் இன நலக் கருத்து தான்.

அடுத்து, இன்னொரு திருவாய்க் குறளையும் நாம் நன்றாக எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. (843)

அஃதாவது, அறிவுணர்வால் ஆராயும் திறனிழந்து, மன வெழுச்சியால் மேம்பட்டு நிற்கும் அறிவிலாதவர்கள், தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் அழிவு, அவர்களின் எதிரிகளாலும் செய்வதற்கு அரியதாகும்.'

தம்பி பிரபாவும், பிற போராளிகளும் இம் மூன்று திருக்குறள் மெய்ம் மொழிகளையும் நன்கு நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

நமக்குள் நாமே போரிட்டுக்கொண்டு அழிவது, நம்மினத்தைக் காத்து, மீட்பதற்கு மாறாக, அழித்து அடிப்புதைத்துக் கொள்வதாகும் என்பதை மறத்தல் வேண்டா. பகைவன் நம்மை விட வலியவன் அல்லன். நாமே அவனைவிட வேறுபாடுகள் கொண்ட மெலியவர்கள். இந் நிலையில் நம் கொள்கை நிறைவேறுவதெப்படி? நான்காம் வகுப்புக் கதையில் கூடிமேய்ந்த நான்கு எருதுகளும் தனித்தனியாகப் பிரிந்தபின் என்ன நிகழ்ந்தது என்பதை யாரும் மறந்திருக்க முடியாதே! தம்பி பிரபாகரன் சிந்திக்கவேண்டும்.

பொதுவுடைமைப் பாவாணர் பேரறிஞர் குணா
அவர்களின் புதிய வரலாற்று நூல்!

இந்தியத் தேசியமும் திரவிடத் தேசியமும்

வெளிவந்து விட்டது! விற்பனைக்கு அணியமாயுள்ளது!!
420 பக்கங்கள் விலை உருபா 25.
சலுகை விலையாக உருபா. 20 க்குக் கிடைக்கும்.
[அஞ்சல் செலவு தனி]
தாமரை கலை இலக்கிய மன்றம்
16, சபாபதி தெரு, [காமராசர் சாலை குறுக்கு]
வெங்காலூர்-560001. -(Bangalore-1.)

கேள்வி 4 : (செந்தில்நாதன், மதுரை.) மதுரையில் தமிழக அரசு உலகத் தமிழ்ச்சங்கம் தொடங்கியிருக்கிறதே! அதில் தாங்கள் கலந்துகொள்ளவில்லையா ?

விடை : அரசியல் தூண்டிலில் தமிழ் இரை வைத்துத் தமிழ்ப் படித்தவர்களைப் பிடிக்கும் உத்தி இது. இதில் நம்மைப்போலும் உண்மைத் தமிழ்த் தொண்டர்கள் சிக்க மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கேள்வி 5: (மா. மனோகரன், கோலியனூர்) நீங்கள் ஏன் சீர் திருத்த எழுத்தைக் கடைப்பிடிக்கவில்லை? பெரியார் மேல் வெறுப்பா? அல்லது அதை நடைமுறைக்குக் கொண்டு வந்த அ.தி.மு.க. அரசு மேல் வெறுப்பா ? அல்லது அறிவியல் வழி தமிழ் வளர்ச்சியில் நம்பிக்கை இல்லையா ?

விடை : எழுத்துச் சீர்திருத்தத்தை நாம் எதிர்க்கவில்லை. அறிவியல் வளர்ச்சிக் கேற்பவும் மொழிப் பயன்படுத்ததிற்கு ஒப்பவும், நடைமுறை எளிமைக்காகவும் நாம் எந்தத் திருத்தத்தையும் வரவேற்கவே செய்கிறோம். ஆனால் உடம்பில் உள்ள நோயைப் போக்கிவிட்டு, உருவ அமைப்புப்பற்றியும், மேல் உடைகளைப் பற்றியும் கவலைப்பட வேண்டும் என்பதே நம் கருத்து. முதலில் மொழித் திருத்தம் வேண்டும். தமிழ் தூய்மை கெட்டுக் கிடக்கிறது. பிழையாகப் பேசப்பெற்றும் எழுதப்பெற்றும் வருகிறது. சீர்திருத்த எழுத்தில் வெளியிடப்பெற்ற நூல்களையே அரசு நூலகங்களுக்கு ஏற்றுக்கொள்ளும் என்று நல்ல நெறிமுறை வகுக்கத் தெரிந்தவர்கள், பிழையில்லாத நல்ல தமிழில் எழுதப் பெற்ற நூல்களையும், இதழ்களையுமே நூலகங்களுக்கும், படிப்பகங்களுக்கும் அரசு ஏற்றுக் கொள்ளும் என்று ஏன் கட்டளையிட விரும்பவில்லை? எனவே, தமிழ் மொழியைப் பற்றி அவர்கள் கவலைப்படாத நிலையில் தமிழ் எழுத்தைப் பற்றி மட்டும் ஏன் அவர்கள் அக்கறை காட்ட வேண்டும்? பெரியாரைப் பின்பற்றுகிறோம் என்று

ஆட்சியினர் செய்யும் ஏமாற்றுகளில் இதையும் ஒன்றாகவே கருத வேண்டியுள்ளது. ஆங்கிலம் போல், தமிழையும் பிழையில்லாமல் கலப்பில்லாமல் நல்ல தமிழில் எழுத, பேச, அலுவலகத்தில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று அரசு அறிவிப்புச் செய்த அன்றே, நாம் எழுத்துத் திருத்தத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கி விடுவோம். அவர்களின் அறிவிப்பு, செயலுக்கு வரட்டும் என்றுகூட நாம் காத்திருக்க வேண்டியதில்லை. தமிழ் வளர்ச்சி என்பது தேர்தல் தந்திரங்களில் ஒன்றாக இல்லாமல் உண்மையாக இருக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை.

கேள்வி 6 (இ. அரசமாணிக்கம்: கல்லிடைக் குறிச்சி) பெருஞ்சித்திரன் என்பது தூய தமிழ்ச் சொல்லா?

விடை: ஆம். சித்திரம் - சித்திரன் - சித்திரம் என்பது தூய தமிழ்ச் சொல்லே. ஒத்தது - ஒத்த உருவமானது என்னும் பொருளையுடைய 'செத்து' என்னும் சொல்லடியாகப் பிறந்தது சித்திரம் என்பார் பாவாணர். பெருஞ்சித்திரன் என்பதற்குப் 'பேரோவியன்' என்பதே பொருள்.

கேள்வி 7: இளவழகன், சென்னை - 3

உங்களோடு யாரும் ஒத்துப் போவதில்லையே ஏன் ?

விடை: தவறு. அவர்களோடு என்னால்தான் ஒத்து போக முடிவதில்லை. உண்மைகளையே நான் விரும்புகிறேன். வரவேற்கின்றேன்; போற்றுகின்றேன். அது பலருக்கும் பிடிப்பதில்லையே, என்ன செய்வது?

கேள்வி 8: (தஞ்சையில் கலந்துரையாடலில் கேட்டது.) பாவாணரோடு இறுதிக் காலத்தில் உங்களுக்குப் பிணக்கு ஏற்பட்டதா ?

விடை: தொடக்கக் காலத்திலிருந்தே என்னுடன் அவர் உண்மையாக நடந்து கொண்டதில்லை. ஆனால், ஆசிரியர் என்னும் நிலையில் அவரிடம் என்றுமே நான் அன்பு காட்டினேன். உண்மையாக நடந்து, உளமுழுமையான ஆதரவு காட்டினேன். தமிழின் பொருட்டு, அவருக்காக என் வாழ்வையே ஒப்படைத்தேன். இறுதிக் காலத்தில் ஆளுக்குத் தக்கப்படியாக அவர் நடந்து கொள்ளத் தொடங்கியதையும், பொருள் விரும்பிக் கடமையில் நெகிழ்ச்சி கொண்டதையும் - இன்னும் சில உண்மையல்லாத நடைமுறைகளையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சிறிதே விலகி நின்றேன். அவரோ, முழுவதுமாக என்னிடமிருந்து விலகிவிட முயற்சி செய்தார்! ஆனால், அந்தோ, முடிவில் சாவு அவரை நம் எல்லாரிடமிருந்தும் விலகச் செய்துவிட்டது.

கேள்வி 9 : ப. இலக்குவன், மஞ்சூர்

அறிவு, பகுத்தறிவு மெய்யறிவு — என்னும் தலைப்பில் 'தென்மொழி'யில் இருபதாண்டுகளுக்கு முன்னர் தொடங்கி இடையில் நின்ற அருமையான மெய்யறிவியல் கட்டுரையைத் தாங்கள் மீண்டும் தொடங்கி எழுதி வரவேண்டும் என்று என்போல் பலரும் விரும்புகின்றனர்! அதை நிறைவேற்றிருல் என்ன?

விடை : காலமல்லாத காலத்தில் எழுதத் தொடங்கியது அக்கட்டுரை; உரிய காலம் வரட்டும்," எழுதுகிறேன்.

கேள்வி 10 : கி. அரங்கநாதன், கோவை.
பாவேந்தரைப்'புரட்சிக் கவிஞர்' என்றுதான் கூற வேண்டும் என்று தி. க.வினர் கூறுகின்றனரே!

விடை:'புரட்சி' என்பதில் யாருக்குமே கருத்துவேறுபாடு இருக்க முடியாது. ''கவிஞர்' என்னும் வடசொல்லால் அவர் அழைக்கப்படுவது அவர் தகுதிக்கும் பெருமைக்கும் குறைவானது. அவரைப் 'புரட்சிப் பாவேந்தர்' என்று அழைப்பதே மிகவும் பொருத்தமானதும் சரியானதும் அவரைப் பெருமைப்படுத்துவதுமாகும்.

கேள்வி 11 : ஈகவரசன், திருச்சி - 14
''மிசாக்காலத்தில் தாங்கள் மன்னிப்புக்கடிதம் எழுதிக்கொடுத்து விட்டு இடையிலேயே வெளியே வந்ததாகவும் அப்படிப்பட்ட நீங்கள் தமிழ்நாடு கேட்பதற்கு என்ன வக்கு இருக்கிறது என்றும், பிரிவினைத் தடைச் சட்டத்தை எரிப்பதாக ஈரோட்டில் தீர்மானம் போட்டு விட்டுப் பின்னர் சட்டத்திற்கு அஞ்சிக் கைவிட்டு விட்டீர்கள் என்றும், அண்மையில் திருச்சியில கூடிய தி.க.வின் செயற்குழுக் கூட்டத்தில் பேசப் பெற்றதாகக் கேள்விப் பட்டோம். அதற்குத் தங்கள் விளக்கம் என்ன ?

விடை : பார்ப்பன இனம் முன்னேறிப் போவதற்கும், தமிழினம் தாழ்ச்சியுற்றுப் போவதற்கும் நாம் ஒருவர்க்கொருவர் தாழ்வாகக் குறை கூறிக் கொள்ளும் இத்தகைய குற்றச்சாட்டு உணர்வுதான் தலையாய காரணம். அவர்கள் தங்கள் இனத்தவர்களைக் கட்டிக் காத்துக் கொள்கிறார்கள். நாம் ஒருவரை ஒருவர் தாழ்த்திக் கொண்டு பின்னிறங்குகிறோம். நமக்கிதில் விருப்பமில்லை என்றாலும் அவர்கள் கூறுவதற்கு நாம் விடை சொல்ல வேண்டியுள்ளதே என்ன செய்வது?

முதலாவதாக, நாம் எதற்காகவும் யாரிடத்தும் என்றும் மன்னிப்புக் கேட்டது இல்லை, ''கெஞ்சுவதில்லை'' என்னும் கொள்கை முழக்கத்தைத் தென்மொழி என்றுமே கைவிட்டதில்லை. மிசாக் கால ஓராண்டுச் சிறையை முழுவதும்

நான் ஏற்றுக் கொண்டே வெளிவந்தேன். இடையில் விடுமுறை (parole) எடுத்துக் கொண்டு வெளிவந்து, வீட்டு நிலையையும் அச்சக, இதழ்கள் நிலைகளையும் சரிப்படுத்திவிட்டுப் போக எண்ணி, அரசுக்கு விடுமுறைக்கு வேண்டுகோள் எழுதியிருந்தேன். ஏனெனில் அக்கால் மிசாவில் இருந்தவர்களுக்கு அவரவர் கட்சிச் சார்பில் மாதத்திற்கு 300, 400, 500, 1000 என்று அவரவர் குடும்பங்களுக்கு உதவித் தொகை கொடுக்கப் பெற்றது. ஆனால் நமக்கோ அக்கால் உதவுவார் (நம் அன்பர்களைத் தவிர) எவரும் இல்லை. எனவே விடுமுறை கேட்க வேண்டியிருந்தது. அதுவும் கிடைக்கவில்லை. அதை இப்பொழுது இவ்வாறு திரித்துப் பேசுவது அவர்களுக்கே நல்லதில்லை. ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொள்வதானால், அந்நிலை எங்கே போய் நிற்குமோ தெரியாது. முடிவாக நாம் என்றும் எப்பொழுதும் எந்தச் சட்டத்திற்காகவும் அஞ்சி நாம் ஏற்றுக் கொண்ட எந்தக் கொள்கையையுமே கைநெகிழ்த்ததில்லை.

பொதுவான உண்மை ஒன்று உண்டு ; ஒருவர் தாம் மெலிவு அடைகிற போதுதான் பிறரைக் குறைகூற முற்படுகிறார் என்பது அது. அதன்படி அவர்கள் இவ்வாறு கூறத் தொடங்கியுள்ளார்களோ, என்னவோ?

அடுத்தபடி, நாம் பிரிவினைத் தடைச்சட்டத்தை எரிப்போம் எனத் தீர்மானம் போட்டது உண்மைதான். ஆனால் அதன் பின்னர்தான் அப்படி ஒரு தனிச்சட்டமே (ordinance or Act) இல்லை என்று தெரிய வந்தது. அதன் பின்னர் வேறு நடவடிக்கை எடுப்பதற்காக எண்ணி வருகிறோம்.

அதுசரி, செயலில் நாம் கோழைகள் அல்லது மோழைகள் என்று குறைகூறப் புகுந்த இவர்கள் இதுவரை செய்த வீரச் செயல்கள்தாம் என்ன? கூட்டம் கூட்டுவதும் மாநாடுகள் போடுவதுமா? அவற்றுக்கான எதிர்விளைவுகளைத்தாம் நடுவணரசின் இந்தித் திணிப்பில் நாம் நேரடியாகப் பார்க்கிறோமே ! இனி, இன்னொன்று; நமக்கும் நம்முன்னோர் வைத்த வைப்பு' என ஒன்றிருந்தால் நாமும் நாள்தோறும் நூற்றுக்கணக்கான மாநாடுகளையும் நடத்தலாம்; மேலும் மேலும் வருவாய்களையும் 'அறுவடை' செய்யலாம். அவ்வாறு செய்வதற்கு நம் இயக்க முதலீட்டுக்கென்று ஓர் 'ஐயா'வோ 'அம்மா'வோ இருக்கவில்லையே, நாம் தாமே முதலும் ஈட்டமும். பின் என்ன செய்வது? எதையும் மெதுவாகத்தான் (ஆனால் உறுதியாக) நாம் செய்ய முடியும்.

(இப்பகுதிக்கு ஒருவர் ஒரு தடவைக்கு இரண்டு கேள்விகளுக்கு மேல் அனுப்ப வேண்டாம் என்றும், கேள்விகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி விடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.)

திருத்திப் படிக்கவும்

இந்த இதழ் 9-ஆம் பக்கக் கட்டுரைத் தலைப்பில் உள்ள "அரயசிலும்" என்னும் சொல்லை "அரசியலும்" எனத் திருத்திப்படிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

செய்திகள்

திண்டுக்கல் தமிழ்ச் சங்கத்தில் பாவேந்தர் விழா !

தி.பி. 2017, மேழம் 14 (27-4-1986) அன்று மாலை 6 மணி அளவில், திண்டுக்கல் தமிழ்ச்சங்கத்தின் சார்பில், பாவேந்தர் விழா சிறப்புடனும், எளிமையுடனும் நடைபெற்றது. தமிழ்ச் சங்கத் தலைவர், திரு. சி. மா. பா. மாணிக்கம் தலைமை தாங்கினர். புலவர். திரு. அந்தோணி வரவேற்புரை வழங்கினர். செல்வி கலைமதியால் பாவேந்தர் பாடல்கள் சில பாடப்பெற்றன. மாநிலத் தமிழ் ஆசிரியர், கழகச் செயலர் திரு. சேதுராமலிங்கம் அவர்கள் தமிழ்ச் சங்கத்தை வாழ்த்திப் பேசினர். விழாவில் பேருரையாற்ற வருகை புரிந்திருந்த, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தூய தமிழ் அகரமுதலித் தலைமைப்பதிப்பாசிரியர், சொல்லாய்வறிஞர் ப.அருளி அவர்களை அறிமுகம் செய்து, திரு. கல்லை. அருட்செல்வன் அவர்கள் உரையாற்றினர்.

சொல்லாய்வறிஞர் அருளி அவர்கள், "பாவேந்தர் உள்ளம்" என்னும் தலைப்பில் அரிய உரைப்பெருக்கினை நிகழ்த்தினர். உலகத்தோற்றம், மாந்தத் தோற்றம், உலக முதன் மூல மொழியாம் தமிழ்த் தோற்றம், தமிழர் இன, நாகரிகப் பண்பாடுகளின் மலர்ச்சி, மாட்சி, ஆரியர் வருகையால் தொடர்ந்த வீழ்ச்சி, திருவள்ளுவப் பேராசானின் இன மேம்பாட்டுக் கருத்தமைவுகள் ஆகியவற்றைத் தெளிவுறச் சுட்டிக்காட்டிப் பாவேந்தரின் உள்ளம் தமிழ் மொழி, இனம், நாடு, பண்பாட்டினைக் காத்திடப் புரட்சிப்பாக்கள் வடித்த பல்வகை நிலைகளையும் திறனாய்ந்து தெளிவுபடுத்தினர். அவையோர் அனைவரும் நெஞ்ச நெகிழ்வுடனும், மகிழ்வுடனும் கேட்டுக் களித்தனர்

தமிழ்ச் சங்கத்தின் செயலர் புலவர். து. முருகையா நன்றி கூறினர். அவருரையில் 'தமிழ்ச் சங்கத்தின் மிகச் சிறந்த நிகழ்ச்சிகளில், மிகச்சிறந்த நிகழ்ச்சி இது' எனக் குறிப்பிட்டார், நாட்டுப் பண்ணுடன் விழா முடிவுற்றது. இந் நிகழ்ச்சிக்கான செலவுகள், சங்கப் பேராளர் திரு. மு. அகமதலி, அறி.இ., அவர்களால் அறக்கொடையாக வழங்கப்பெற்றிருந்தது. சொல்லாய்வறிஞர் ப.அருளி அவர்களைச் சங்கத் தலைவர், பொருளாளர் திரு. அ. அ. வெ. அண்ணாமலையார் ஆகியோர் பாராட்டி விடை பெற்றுக்கொண்டனர். திருவாளர்கள்: கயிலை. வீ. இராசாராம், நல்லை அழகுபாண்டியன், கழராம்பன். தமிழன்பன், கல்லை. அருட்செல்வன், தினகரன், நல்லமுத்து, நாகராசன் ஆகியோர் சூழ, தமிழ்ச் சங்கச் செயலர் புலவர். து. முருகையா பெருமிதத்துடனும், பேரன்புடனும் இரவு 10 மணியளவில் அறிஞர் அருளியை வழியனுப்பி வைத்தார்.

— செய்தி: 'வணங்காமுடி'

மட்டைப் பந்தாட்டமும் (கிரிக்கெட்டும்) இன்றைய அரசியலும்!

—யு. கே. செங்கோட்டையன், கமு, ச இ.

விளையாட்டுகளைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் கூட, மட்டைப்பந்து விளையாட்டை (கிரிக்கெட்டை)ப் பற்றி எல்லாமே தெரிந்திருக்கிறார்கள் இதிலிருந்து தெரிவது என்ன? மட்டைப் பந்து ஒரு விளையாட்டே அன்று. நாம் மட்டைப்பந்தை விளையாடுவதில்லை; அது தான் நம்மை விளையாடுகிறது.

வெள்ளைக்காரர்கள் விட்டுச்சென்ற அவமான எச்சங்களுள் தலையாயது இந்த மட்டைப்பந்து விளையாட்டு. பல் முளைக்காத குழந்தைகள் முதல், பல் இனிமேல் முளைக்க முடியாத கிழவர்கள் வரை பைத்தியமாக அலைந்து திரிந்து இதற்காகச் செலவு செய்யும் உழைப்பு, நேரம் அனைத்தும் வீண்.

பெரும்பாலும் ஒரு காலத்தில் பிரிட்டனுக்கு அடிமை நாடுகளாக விளங்கிய நாடுகளில் மட்டும்தான் மட்டைப்பந்து ஆளுமை செலுத்துகிறது. இந்து மதம் சொல்கின்ற 'மாயை' என்பதைப் போல இந்த விளையாட்டும் ஒரு மாயையாக, இந்திய மனங்களில் ஆரவார ஆட்சி செலுத்துகிறது.

ஆடம்பரமாக வெள்ளை ஆடை உடுத்தி நாகரிக உலா வந்து, இந்த வீரர்கள் (?) ஆடுகின்ற ஆட்டத்தையும், அடிக்கின்ற கூத்தையும் சிறுமிகள் முதல் கிழவிகள் வரை சுவைக்கின்ற முறை, முறைகேடானது. முட்டாள்தனமானது.

தொலைக் காட்சியிலும், வானொலியிலும் ஓயாமல் ஒளிபரப்பி, ஒலிபரப்பி வரிப்பணத்தை வாரி இறைத்து மக்களை இந்த விளையாட்டு 'மூளைச்சலவை' செய்துவிட்டது. இதில் விளையாட்டுக்கான கூறுகளே இல்லை. சுவைப்பதற்கான இயல்புகளே இல்லை. இது ஓர் உலக விளையாட்டு அன்று. உருசியாவிலும், அமெரிக்காவிலும் இதற்கு மதிப்பே இல்லை. காரணம் விளையாட்டுக்கான கணக்கில் இது அடங்குவதே இல்லை.

ஒலிம்பிக்கில் மட்டைப்பந்து விளையாடப்படுவதில்லை. குளிர் நாடுகளில் இளம் வெய்யிலில் மெதுவாக, ஆனால் ஐந்து நாள்கள் ஆடி ஓடித் திரிந்து, செல்வர்களின் பொழுது போக்காக இருந்து வந்த இந்த மட்டைப்பந்துக் கூத்து, இந்தியா போன்ற பஞ்சை ஏழைகளையும் வன்கவர்பு செய்துகொண்டிருப்பது இழிவான கேடாக(!) உள்ளது.

இஃது ஒரு மக்கள் விளையாட்டு அன்று அது செல்வர்களுக்கே உரியது. இந்த நாட்டில், மேலேயுள்ள இனங்கள் எதைச்

செய்கிறார்களோ அதை அப்படியே பார்த்துச் செய்யும் கீழ்த்தரமான அறிவு உள்ளது.

அறிவுத்தனமாக நையாண்டி செய்வதில் பெர்னார்ட் சாவுக்கு இணை யாரும் இல்லை. புகை பிடிப்பதைப்பற்றி அவர் கூறுவது : 'சிகரெட்டின் ஒரு நுனியில் நெருப்பு', மறு நுனியில் முட்டாளின் வாயும் உள்ளது. ஃ இவருடைய பல்லில் இதுவும் விழுந்து அவருடைய தாக்கத்தைக் கொட்டிக் கொண்டுள்ளது. இந்த விளையாட்டைப்பற்றி சா என்ன கூறி இருக்கிறார் தெரியுமா ? "பதினொரு முட்டாள்கள் விளையாடுவதைப் பதினோராயிரம் முட்டாள்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்."

இந்த விளையாட்டு மற்ற நல்ல விளையாட்டுக்களான கால் பந்து, கைப்பந்து, வளைகோல் பந்து (ஆக்கி), கூடைப்பந்து, வரிப்பந்து,(டென்னிசு)இவற்றை அமுத்திவிட்டது. தேசிய அளவில் இந்த நாட்டின் உண்மையான விளையாட்டு வீரத்தையும், ஆர்வத்தையும் ஒடுக்கிவிட்டது. ஒழித்துவிட்டது. மற்ற விளையாட்டுகள் அனைத்தும் ஏழைகளைவிட இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. உண்மையான விளையாட்டு உணர்வு நமக்குள் நம்மைப் போலவே, அதுவும் செத்துக் கிடக்கிறது. ஒலிம்பிக்கில் தாம் வாங்கிய அழகிய சுழிய (பூஜி)யங்களே இதற்கு அருமையான சான்று.

தங்கள் வீடுகளில் என்ன நடக்கிறது என்பதுகூடத் தெரியாது. ஆனால், இந்தக் குடும்பத் தலைவர் !)களுக்கும் தலைவிகளுக்கும் மட்டைப்பந்து வீரர்(!)களின் வீடுகளில் என்ன நடக்கிறது என்பது துல்லிடமாகத் தெரியும். அவர்களுடைய மனைவிமார்கள் எங்கே துணி தைக்கிறார்கள், அவர்களுடைய காலை-பகல்-இரவு உணவு வகைகள் என்ன என்ற விளக்கங்கள் நம்முடைய மக்(கு)களுக்கு அத்துபடி. நலம் உசாவிக் கொள்வதைபபோல் எண்ணிக்கை (இசுகோர்) பரிமாறப்படுகின்றன. இவ் விளையாட்டைப் பார்க்காவிட்டாலும் இவர்கள் செத்துவிடுவார்கள் போல இருக்கிறது. [ஏதோ ஏற்கனவே உயிரோடிருப்பவர்கள் என்று எண்ணிக்கொண்டு]

பள்ளிக்கூடக் குழந்தைகளையும், மாணவர்களையும் பற்றிச் சொல்லவே வேண்டாம். கணக்கும், வரலாறும், அறிவியலும், பொருளியலும் படித்துத் தெரியவேண்டிய அகவையில் படிக்காமல் ஊரைச் சுற்றுவதோடு, மட்டைப்பந்து விளையாட்டுத் தொடர்பான தேவையில்லாத புள்ளி விளக்கங்கள் இவர்களுடைய மூளைகளில் நிரம்பி வழிகின்றன.

ஃ (இக்கூற்று பெர்னார்டுசாவினுடைய அன்று, சாமுவேல் சான்சனுடையது)

விலை நிலை எப்படி ஏறினாலும், பண வீக்கம் எந்த அளவுக்கு வீங்கினாலும், வறுமை எப்படி வாட்டினாலும், வேலையில்லாத் திண்டாட்டம் இவர்களை விழ்த்தினாலும் இவர்களுக்குக் கவலை யில்லை. கவனமெல்லாம் இந்த விளையாட்டு மட்டையின்மீதுதான். தனக்கு மிதிவண்டி வாங்கக் காசு இல்லாவிட்டாலும் கூட, கவாசு கர் இயங்கி வாங்குவதைப் பற்றியே இவர்கள் இரவு-பகல் எந் நேரமும் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.

அது சரி! இந்தக் கிறுக்கு விளையாட்டுக்கும், இன்றைய அர சியலுக்கும் என்ன தொடர்பு? [தலைப்புக்கு வருவோம்] இன்றைய அரசியல் ஏறத்தாழ இரண்டாவது மட்டைப்பந்து விளையாட்டு போல் ஆகிவிட்டது. முதல் விளையாட்டில் எப்படி விளையாட்டு இல்லையோ, அதைப்போலவே இந்த இரண்டாவது அரசியல் விளை யாட்டில் அரசியல் என்பதே இல்லை. மட்டைப்பந்து செல்வர்களின் அரசியலாகவும், இன்றைய அரசியல் செல்வர்களின் மட்டைப் பந்தாட்டமாகவும் மாறிவிட்டன. இந்தியாவை, அஃதாவது வெள் ளைக்காரர்கள் ஒழித்தது போக மீதியிருக்கும் இந்தியாவை - ஒழித் துக்கட்டுவதில், இந்த இரண்டு உடன்பிறவாப் பிறப்புகளுக்கும் ஒரே முடிவான எண்ணம் உண்டு.

இன்று அரசியலா நடக்கிறது? இதுவா காந்தி கனவு கண்ட அரசியல்? இப்படி ஓர் அரசியல், பிற்காலத்தில் வரும் என்று தெரிந்திருந்தால், கோட்சேவுக்கு அந்த அவப்பெயர் வந்திருக்காது. காந்தியே தம்மைத் தாமே சுட்டுக்கொண்டிருப்பார்.

பட்டினி கிடந்தாவது கொள்கை அடிப்படையில் அன்றைய அரசியல் நாட்டு இலக்கணங்களோடு வளர்ந்தது. இன்றைய அர சியல் கொள்கையை இழந்து புலம்பனை (ஆன்மாவை) இழந்து விலங்குகளையும் விஞ்சும் வகையில் காட்டு விலங்காண்டித்தனமான பாதையில் 'கன்கார்ட்' வானூர்தி வேகத்தில் சென்றுகொண் டுள்ளது.

சாதி அடிப்படையில் குழு அடிப்படையில் முரண்பட்ட தந் நலக் கும்பலாக மாறி, பதவி நாற்காலிகளின் பின்னே பைத்திய மாக அலைந்து, அதிகாரத்தின் மூலம் பணத்தையும், பணத்தின் மூலம் அதிகாரத்தையும் பிடிக்கும் அரத்த வெறிக் கண்ணாமூச்சி விளையாட்டில் இன்றைய போலி அரசியல் பொதி மாடுகள் ஈடு பட்டுள்ளன. அடியார்கள் வளர்த்த அரசியல் இன்று அடியாட் களின் கைக்குப் போய்விட்டது.

வாயடிப் பகட்டன் (Stunt Master) முதல்வராக இருக்க முடியும், [(ஈசக்கிள் செயின்) மிதிவண்டித்] தொடரி சுற்றத் தெரிந்த பேட்டை அரம்பன்கள் (ரௌடிகள்) சட்டமன்ற உறுப்பினர்களாக

வும் வரமுடியும். அன்று பேட்டை; இன்று கோட்டை இதுதான் வேறுபாடு.

போலிகளைப் பாதுகாக்கும் பூதங்களால் அரசியல்காரர்கள் படிநிலை வளர்ச்சியின் பார்வைக்கு எட்டாத அரைகுறைப் பிறவிகளாக அவலங்களாக மாறிவிட்டனர். நாட்டில் இலக்கணங்களை மீறிவிட்டனர்.

கடவுள் இருக்கும் இடம் தெரியாத இறையிலிகளின் ஆட்சியில் கையூட்டு இல்லாத இடம் தெரியவில்லை. பொய் புரையோடி விட்டது. அரசோ-ஊமை; அரசவையோ-ஊமை; மக்களோ-செவிடு; அரசியலோ-குருடு என்ற அளவுக்கு திறனாய்க் கூடத் தகுதியற்ற அளவுக்கு அரசியல் தாழ்ந்துவிட்டது.

நடுவண் அரசியலுக்குச் சற்றே திரும்புவோமா? மெய்க் காப்பாளர்களின் வஞ்சகக் குண்டுகள் துளைத்த, தாயின் பிணம் சுட்டெரிக்கப் படுவதற்கு முன்பாகவே, தனயர் ஆட்சியைப் பிடித்து விட்டார். ஒரே நாளில் இரண்டு படுகொலைகள்! ஒன்று இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டது. மற்றொன்று மக்கள் நாயகம் படுகொலை செய்யப்பட்டது.

கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் தான் தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஆனால் தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் பிறகு கட்சித் தலைவரான கதை, குடும்ப வெறி அரசியலுக்கு மட்டுமே உரியது.

கொலை செய்யப்பட்ட பிணத்தை, உடனடியாகக் கொளுத்தாமல், நான்கு நாள்களுக்கு அந்தப் பிணத்தை 'உயிரோடு' வைத்திருந்து, உலகத் தலைவர்களை ஒட்டுமொத்தமாகச் சேர்த்து, எரியூட்டப்பட்டது. பதவி நாற்காலியைப் பற்றிக்கொள்ளத்தான்! அழுவதற்கு ஆடுகள் இருக்கும் வரை, ஓநாய்களுக்கு என்ன கவலை.

அதே வேகத்தில் ஏராளமான பணத்தையும், மக்கள் இரத்தத்தையும் வாரி இறைத்து, மக்களைக் கொள்ளையடித்து, எப்படியோ ஆட்சிக்கு வந்துவிட்டனர், ஏமாறுதலைத் தவிர வேறு மாறுதலே இல்லை. மக்களில் பெரும்பாலோர் இன்னும் ஒன்றும் நூற்றாண்டுக்கே வரவில்லை. ஆனால், (பிணத்தைக் காட்டி ஆட்சிக்கு வந்தது) தலைமை அமைச்சரோ, இருபத்து ஒன்றும் நூற்றாண்டுக்கு அழைக்கிறார். மத வெறி, சாதி வெறி, வட்டார வெறி முற்றிக் கொண்டுள்ளன. கறுப்புப் பணம் கணக்கிட முடியாத அளவுக்கு உருவாகி விட்டது. (கணக்கிட முடியாததால்தானே அது கறுப்பும் பணமாக உள்ளது என்பது வேறு செய்தி). வெள்ளைக்காரர்கள் காலத்தில்கூட, வெள்ளைப் பணத்தின் ஆட்சி இருந்தது. ஆனால், கறுப்பர்கள் ஆட்சியில் கறுப்புப் பணம்தான் ஆளுகிறது.

பறம்பை அறிவன் பக்கம் :

1. 'அறிஞர்களே' உங்களுக்கு ஒரு கும்பிடு!

"அறிவு எழுச்சிக்குத் 'தமிழ்க் காப்பு'ணர்ச்சி தகுதியற்ற செயல்" என்று 'தமிழ் அறிஞர்கள்' கூறுவார்கள்... 'அறிவு கொழுத்தவர்கள்? 'நண்டு கொழுத்தால் வளைக்குள் இராது? இவர்கள் 'தமிழகத்தை' விட்டு, ஏன் மறந்து விட்டு - வானிலே தாவிக் குதித்து வருபவர்கள் அன்றோ? அப்படித்தான் பேசுவார்கள்!

உரம் நஞ்சாகிப் போகும் அளவு 'மட்டமான' விளைச்சலைப் பெருக்கிக் கொண்டிருப்பவர்கள், எளிய உழவனின் வயல் விளைவு பற்றிக் கவலைப் படப்போவதில்லை. ஏனெனில் இவர்கள் 'விளைச்சல், விளைச்சல்' பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருப்பவர்கள்...

எப்படிப்பட்ட விளைச்சல்? விளைந்ததை அறுவடை செய்பவர் யார்? அள்ளிக் கொண்டு போவது யார்? கொள்ளை ஊதியம் அடைவது எவர்? — இந்த வினாக்கள் இவர்களுக்கு வேண்டாத வேலை! ஏனெனில், இவர்களின் ஆண்டைகள் போடும் கட்டளை, 'பயிர்மேனி காண உரம் கொண்டுபிடி' என்பதே ஆகும்!

'கல்வியும் போய், பொருளியல் விளைவும் போய்விடும்' என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றவர்கள் — 'கல்வியும், பொருளும் பெறும் வாய்ப்பிழந்து கிடக்கும் குமுக அமைப்பைத் தகர்ப்பது பற்றி இவர்கள் நினைத்தும் பார்ப்பதில்லை!

வி.ஐ. சுப்பிரமணியம் ஆகட்டும், வி. கி. குழந்தைசாமியாகட்டும் 'அறிஞர்கள்' என்பதில் எங்களுக்கு ஐயமே இல்லை; அதை

கொடி பறக்கிறது! உரிமை பறந்தே விட்டது! கொடுமையை எதிர்ப்பவர்களுக்கு அவர்கள் எதிர்க்கின்ற கொடுமையை விடப் பன்மடங்கு கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் ஒரு தரம் இருப்பதற்குப் பகரமாக, எல்லாவற்றுக்கும் ஒரு விலைதான் இருக்கிறது. எதை வேண்டுமானாலும் வாங்கிவிட முடியும்? உரிய விலை கொடுத்துவிட்டால் போதும்.

நாடாளு மன்றத்தின் ஆளுமையை உலக வைப்பகத்திற்கும் உலக வணிகத்திற்கும் நீர் வார்த்தாகி விட்டது. பெரும்பாலான மக்கள் வெறும் பிணங்களுக்குச் சமம். இந்தச் சூழ்நிலையில்தான் இருக்கிறது இன்றைய அரசியல். எப்படி மட்டைப்பந்து விளையாட்டில் விளையாட்டு இல்லையோ அதைப்போல், அரசியலில் அரசியல் இல்லாமற் போய்விட்டது.

ஆளாத ஆளும் கட்சிகளும், எதிர்க்காத எதிர்க் கட்சிகளும் இருக்கும் சூழ்நிலையை அரசியல் என்று எப்படி அழைக்க முடியும்?

நன்றி: 'விழிப்பு' - 15-4-86.

நிறுவிக் காட்டுவதற்கு 'விழா மேடைகள்', 'அரசின் அரங்குகள்' வேறு வேண்டாம்! அவர்களின் படைப்புகள் போதாவா?

'தமிழ் அழிப்பு முயற்சி'யும், தமிழின வளர்ச்சித் தடைகளும் அன்றாட நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன.

ஆகவே, நாம் தற்காப்புக்கே 'ததிங்கின தத்தோம்' போட்டுக் கொண்டிருக்கிறோம்! பண்பாடு, இன வளர்ச்சிக்குத் தடைகளாக உள்ளவற்றை எதிர்த்துப் போராடும் 'உரிமை' யற்றவர்களாக உள்ளோம். 'திட்டமிடும் உரிமை'யையும் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்!

இந் நிலைமையில் 'அறிவியல் வளர்ச்சியின் தீவிரத்தில்' போட்டிப் போடுவதெப்படி? 'முடவன்' ஒலிம்பிக் வெற்றியாளர்களோடு ஓடுவதியலுமா? 'அறிவின் அடிமை'களே தன்னுணர்ச்சி கொண்டு எழுந்து நில்லுங்கள்! அப்போதுதான் உங்கள் 'அறி'வினால் ஆவதொன்றுண்டு!

உலகில் 'வல்லரசியம்' ஏற்பட்ட 'அளவு' மக்கள் நாயகம் அரும்பவில்லை. அவ் 'வல்லரசியம்' பெரும் முதலாளிகளுக்கும், தரகுக் காரர்களுக்குமே' ஆதரவாக நின்று வருகின்றது. பாட்டாளிகள் அனைத்து அதிகாரங்களும் பெற்று விட்டார்களா என்ன? இந்த 'அறிஞர்கள்' 'பட்டினி' கிடந்து 'பாவாணர்'போல் தமிழை ஆய்ந்து வருகின்றவர்களாக இருந்தால், சற்றேனும் தமிழின அடிமைத் தனத்தை எண்ணிப் பார்ப்பார்கள்! (எவரும் பட்டினி கிடக்கக் கூடாதென்பதே நம் நோக்கமாகும்)

தமிழரிடையே உள்ள 'விடுதலை உணர்ச்சி'யை — தாயூற்றத்தைத் தடுத்து 'மேலேற்றப் போவது' யாரையோ? 'தமிழறிவை' விற்றுப் பிழைப்பவர் - கூலியடிமைகள், 'தமிழின விடுதலை' உணர்ச்சியைப் பேசவும் தகுதியற்றவர்கள்! இவர்கள் கூறுகின்றார்கள் 'தமிழை' விற்பவர்' என்று!! 'திருடி' ஓடுபவன் 'திருடன், திருடன்' என்று முன்னேடுதல் போன்றதே ஆகும் -இது!

அறிஞர்களே, உங்களுக்கு ஒரு கும்பிடு. உங்கள் ஆய்வைத் தொடருங்கள். 'அறிவியல்' பேரைச் சொல்லி 'அடிமை'களுக்குத் 'தமிழ்மூலம் அறிவு' பற்றிப் புலம்புதல் வெற்றுவேலையாகும், இந்த 'விடுதலை கெட்ட' அறிவைப் பெற்றுத் துணையாக்கிட முயலாதீர்கள். அவர்கள் பொருட்டு ஏராளமாக அல்லல்படும் உழவர், தொழிலாளர், எளியவர் உழைப்பை ஒட்ட உறிஞ்சிட 'அறிவுரை' பகராதீர்கள்!

கும்பிடு போட்டுப் 'போய் வருக' அறிஞர்களே என்கிறோம்! 'நாளை' வருக! அப்போது 'வேலை' உங்களுக்கும் உண்டு!

2. இந்தி, ஆங்கிலம் -சமவுரிமை!

'இந்தியா'வில் நடுவப் படுத்தப்பட்ட அதிகாரக் குவிப்பு! அதற்கு ஏவல் புரியும் மொழிகள் இந்தி, ஆங்கிலம்;

'ஆங்கிலத்தை' அகற்றி 'இந்தியே எல்லாம்' என ஆக்கிடத் தீவிர முயற்சிகள் நடைபெறுகின்றன.

தேசிய இனங்களின் தாய்மொழி உரிமை பறிக்கப்பட்டு வருகின்றது.

"இந்தியைத் திணித்தாலும் எதிர்ப்போம்; ஆங்கிலத்தைத் திணித்தாலும் எதிர்ப்போம்; எந்தத் திணிப்பையும் எதிர்ப்போம்; — இப்படி எதிர்ப்பே இலக்கணம் ஆகிப் போனவர்கள் பலர். இவர்தம் எதிர்ப்பு திட்டவட்டமான நடைமுறையில் இல்லை. எதிர்ப்பில் வரும் ஊதியம் கொண்டு முதலைப் பெருக்கிக் கொள்ளுகின்றவர்களை மொழிச் சிக்கலைக் கையாள்பவர்களிடமும் காண்கிறோம்.

'இந்திய' மண்ணில் 'தாய்மொழி' உரிமை கேட்டுப் போராடும் பஞ்சாபியர், அசாமியர்களைப் பார்க்கிறோம். தமிழர்களையும் காண்கிறோம். நாமும் 'தமிழர்' என்று கூறிப் பீற்றிக்கொள்கின்றோம்.

தமிழ்நாட்டில், இந்தி(ய) ஆட்சியுடன் கைகோத்துத் திரியும் திராவிடப் பரம்பரைகளின்' ஆட்சியுதிகாரத்தின் நழுவல்போக்குகளையும் தொடர்ந்து கண்டு வருகின்றோம்.

நாம் தமிழாட்சியதிகாரத்தில் நிற்க முதல் கட்டப் போராட்டத்தில் நிற்க வேண்டும். நமது எதிர்நிலை எடுத்து, அதிகார ஆளுமையோடு திமிர் பிடித்துப் புகுந்து கொண்டிருக்கிற இந்தியைப் புறங்காணுதல் வேண்டும். ஆங்கிலம், இந்தியைச் சட்டென்று புகவிடாமல் தடுக்க உதவும் சாளரக் கதவாகவே பயன்பட்டு வருகிறது. இங்கே 'எதிர்ப்பு, எதிர்ப்பு' என்ற கூச்சல் மட்டுமே தமிழர்களை இணைக்கப் பயன்படாதென்பதை அறிந்து கொள்ளுதல் நல்லது. அப்போதுதான் சகட்டு மேனிக்கு எதிர்ப்பது என்பது போய் திட்டவட்டமான எதிர்ப்பு மூலம் எதிரியை நிலை குலையச் செய்தல் இயலும்.

சட்டப் பொத்தல்கள், அவற்றில் உள்ள சந்துபொந்துகளில் பதுங்கிக் கொள்ளும் எதிரிகளை நாம் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. நாம் எதிரியின் சட்டப்பொத்தல்களில் 'உரிமைக்கான உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கிறோம். 'இந்தியா'வில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களின் போராட்ட எழுச்சியை — மக்கள் போராட்டங்களை நம்புவோம். அவர்களை ஒடுக்க உதவிடும் அரசியல் அமைப்புச் சட்டத்தை எதிர்த்து நிற்போம்.

அதேவேளை, அரசியல் அமைப்புச் சட்டம் தந்துள்ளதாகக் கூறப்படும் 'அடிப்படை உரிமைகளைக் பகடிக் கூத்தாக்கும்' ஆளும் கணத்தின் அதிகாரக் கொடுமுடி மீதேறித் தவர்த்திடுவோம்

'புனிதம்' என்ற பேரில் மக்கள் உரிமைகளை மறுக்கும் சட்ட நெறிகளைப் பாதுகாக்கும் மக்கள் எதிரிகளை நாம் இனம் காணுதல் வேண்டும்.

'இந்திய' மக்களின், 'உலக மக்களின் ஒற்றுமை உயர்வை விரும்புகின்ற உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரம் அமைந்திடத் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் உதவுமே யன்றித் தடைக்கல்லாகாது என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துவோம்!

தமிழக அரசு, விலைமகள் கூடங்கள் நடத்தலாம்!

— அப்பாவி

தமிழக அரசின் குடியரசு நாள் செய்தி!

தமிழக அரசு குடியரசு நாள் பரிசாகத் தமிழக மக்களுக்கு ஒரு புது பரிசைக் கொடுத்துள்ளது. "குதிரைப் பந்தயத்தை' அரசு உடைமை ஆக்குவதுதான் அந்தப்பரிசு.

சென்னைக் குதிரைப் பந்தய ஆளுமையை அரசே ஏற்றுக் கொள்ளும், சட்ட வரைவு சனவரி 23 ஆம் நாள் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டு, விரைவு விரைவாக அடுத்த நாளே அது நிறைவேற்றப்பட்டது. சென்னை நகரக் காவல் துறை ஆணையர் திரு. தேவாரம் அவர்களின் அறிக்கையின் பேரில், குதிரைப் பந்தயக் குழும ஊழியர்கள், அலுவலர்கள் பந்தயப் பணம் கட்டும் பொது மக்கள் ஆகியோர் நலனைப் பாதுகாக்கவே, அரசு குதிரைப் பந்தயத்தை ஏற்று நடத்துவதாகக் கூறுகிறது.

முன்பு அரசு, கள்ள மது பெருத்துவிட்டது, அதைக் கட்டுப் படுத்த முடியவில்லை, நாங்கள் மதுவிலக்கைத் தளர்த்துகிறோம் என்றார்கள். பிறகு இசைவு பெற்றுக் குடிக்கலாம் என்றனர். மீண்டும், மேலும் தளர்த்தி முழு அளவு கள், எரிநரு குடிக்க இசைவு அளித்தனர். தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க அரசே நல்ல நரு விற்கும் என்றார்கள். பின்னர் ஏலத்தில் முறை கேடுகள் வருவதால் சரியான அளவுகளில் நரு மக்களுக்குக் கிடைப்பதில்லை என்று அரசே நரு பகிர்ந்தளிப்பை ஏற்று நடத்தும் என்றார்கள். உரிமம் பெற்று அபினைப் பயன்படுத்தலாம் என்றார்கள்.

இன்று தமிழகமெங்கும், விண்மீன் விடுதிகள் என்ற பெயரில் அம்மண (காபரே) ஆட்டங்கள் போன்ற ஆடை அவிழ்ப்பு நடனங்களும், விலைமகளிர் வாணிகங்களும் நடைபெற்று வருகின்றன.

அரசே பரிசுச்சீட்டு நடத்தி, மக்களை ஏமாற்றுகிறது. அரசே குதிரைப் பந்தயம் நடத்தி, இனி மக்களை ஏமாற்றப் போகின்றது, போகின்ற போக்கைப் பார்த்தால், தமிழக அரசே ஒரு சூதாட்ட அரசாக மாறி, நாட்டில் விலைமகளிர் பரவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இடைத் தரகர்கள் தொல்லை அதிகம் உள்ளது. வாடிக்கையாளர்கள் பரத்தமை செய்யும் பெண்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்! ஆகவே, இவற்றை எல்லாம் சீர்செய்ய, தமிழக அரசே பரத்தமைத் தொழிலை ஏற்று நடத்தும் எனச் சொன்னாலும், வியப்படைவதற்கு இல்லை.

நன்றி : 'விழிப்பு' - 15-4-85.

தனித்தமிழ்நாடு இயலாதா?

- மெய். அருண்மொழியன்

தென்மொழி சுவடி 21 ஓலை 12 இதழில் சிறப்பு மடல் ஒன்று வெளியிடப் பெற்றிருந்தது. தனித்தமிழ் நாடு இயலுமா? அம்மடல் பற்றி என்னுடைய கருத்தை இதோ உரைக்கின்றேன்.

மடல் எழுதிய அன்பர் க. சி. அகமுடை நம்பி தமிழ்நாட்டின் நிலையைத் தெளிவுபட விளக்குகின்றார் உண்மையே. தமிழ்நாட்டில் தமிழர் எண்ணிக்கைக்குச் சரியாகப் பிற இனத்தார் வாழ்கின்றார்கள் என்றும், தமிழக எல்லை மிகவும் சுருங்கி விட்டது எனவும், தனித்தமிழ்நாடு பற்றிய எண்ணம் எதுவுமில்லாமல் இங்குள்ளோர் இருப்பது பற்றிக் கூறியும், எனவே தனித்தமிழ்நாட்டு முயற்சி வெற்றுவனது, பயனற்றது, தேவையில்லாதது என்று முடிக்கின்றார்.

நம் நாட்டில் ஏனோ தெரியவில்லை அதிகம் படித்தோர் எல்லாம் அறிவாளர்களாக மட்டுந்தாம் இருக்கின்றார்களே அன்றிக் குமுகாயச் சீர்திருத்தக்காரர்களாக இல்லை. அது நம் கல்விமுறையில் உள்ள குளறுபடி. வெறும் பணிக்காக மட்டும்தான் படிப்பு என்று உள்ளதே அன்றிப் படிப்பதனால் இந்த மொழி இனநாட்டிற்கு எப்படிப் பயன்படுவது அல்லது ஏன் பயன்பட வேண்டும் என எண்ணுகின்றனர். கல்வி பெறும் முறையும் கல்விப் பாடங்களைத் தெளிவு செய்து அரசு கற்பிக்கச்செய்வதும் குமுகாயச் சீர்திருத்தத்திற்கு அன்று; எனவே பெரிய பணி ஆற்ற வேண்டும், ஒரு மருத்துவராகவோ அல்லது பொறியாளராகவோ அல்லது ஆட்சித்தலைவராகவோ வந்து நான்கு பேர் மதிக்க வாழ வேண்டும் என்று தான் விரும்புகின்றனரே அன்றி மருத்துவராகிப் பொதுத்தொண்டு செய்யவும் ஆட்சித் தலைவராகி அல்லல்படும் மக்களின் கண்ணீரை அகற்ற வேண்டுமென்றும் யாரும் விரும்புவதில்லை. பிற இனத்தை விட இந்த தமிழினத்தில் பொது வாழ்க்கை ஒழுங்கு மிகவும் கெட்டுள்ளது அதற்கு முழுக்கரணியம் ஆண்டைகளும் அவர்கட்குச் சார்பான ஆட்சியாளர்களும்தாம்; தமிழகம் இவ்வாறு இருக்க இதன் விடுதலையை எப்படி முன்னெடுப்பது என்றுதான் தோழர் அகமுடைநம்பி உள்ளம் வெதும்பிக்கூறியிருப்பார் என்று எண்ணுகின்றேன்.

தமிழர்களின் எண்ணிக்கைக்குக் குறையாத அளவில் மலையாளி, தெலுங்கர், மராத்தியர், குசராத்தி இங்கு இடம் பெற்றது எப்படி? களப்பிரர்களின் ஆட்சிக்குப் பிறகு அவர்கள் ஆட்சியில் இருந்து தமிழகம் தன் தனித் தன்மையை இழந்து கொண்டே வந்துள்ளது. நம் முன்னோர்களின் கொடை மடமும் கரவான உள்ளம் இன்றி யாரையும் நம்பியதாலும் தங்களுக்குள்

ஒற்றுமையின்மையாலும் படிப்படியாகத் தாங்கள் வீழ்ச்சி அடைந்து பிற இனத்தாருக்கு அடிமைப் படலாயினர். பகை இன அல்லது வேற்றின மன்னர்கள் ஆட்சியில் இந்த இனங்கள் இங்குள்ள செழிப்பிற்காகக் குடியேறினர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுநோக்குள்ள தமிழன் தன் இடத்தைத் தந்து தான் இன்று அவனிடமே அடிமை வேலை செய்து அவன் தரும் எச்சிலுக்காக அங்காந்து கிடக்கின்றான். சாதி அமைப்புக்கொண்டு தமிழரைப் பிரித்து அவர்க்குள் கலகம் தோன்றச் செய்து அதன் மூலம் தங்கள் நிலைப்பாட்டை உறுதி செய்து கொண்டுள்ளனர். அரசியலில் சாய்கால் பெற்று இன்று அவரெல்லாம் மிகமிக உச்சியில் வாழ்கின்றனர். தன் மண்ணிலேயே வந்தேறிக்கு வளமனை தந்து தான் சாலை ஓரங்களில் உண்ணவும் உடுக்கவும் உறங்கவும் உள்ள, தேவையின்றித் தவிக்கும் இனம் உலகில் வேறேதும் இல்லை அந்தத் தமிழினம்தான்.

தனித்தமிழ், தனித்தமிழ்நாடு என்றெல்லாம் யாரும் எண்ணிப் பார்க்காத கரணியம் தமிழனின் புதியன விரும்புதலாலேயே. பொதுவாகத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் இனம் தமிழினம் தான். தன்னுடைய மொழியையும் தாழ்த்தியது அரை வயிற்றுச் சோற்றுக்கு வழியில்லாதவன் எங்கே தனித்தமிழ் பற்றி நினைப்பான். அவனுடைய தவறன்று தன்மொழியைப்பற்றிய உயர்வை அவனறியுமாறு அவனுக்குக் கல்வியறிவு ஊட்டப் பெறவில்லை அவனை அடிமை கொண்ட வேற்றினத்தாரை அவன் உயர்வாக எண்ணுமாறு ஆக்கப்பட்டான். இது ஒரு அரசியல் சூழ்ச்சியே.

உலக மொழிக்கெல்லாம் தாய் தமிழ்தான் அதில் ஐயமே இல்லை. உலக மாந்தர் எல்லோரும் தமிழர் வழியினர் தாம் அதுவும் அறிவியல்படி உண்மையே அதற்காகத் தந்தையும், தமையனும் ஒன்று என்றோ அக்கையும் அம்மையும் துணைவியும் ஒன்று என்றோ எப்படி எண்ணுவது? அப்படி வைத்துக் கொண்டால் உலகில் உள்ள மாந்த இனமே ஒரே வழியில் இருந்து முகிழ்த்தது தான் என்று கொள்ள வேண்டி வரும். உண்மையும்கூட. பின் இனம் பெருகி வளர்ந்து குடும்பம் கூட்டம், அரசு, நாடு ஆகிப் பிரிந்ததைப் போன்று பங்காளிப் பிரிவினை தான்? அதற்காக உலக மொழிக் கெல்லாம் தாய் என்று கொண்டு எல்லோரும் நம்மை வெட்டிக் கூறுபோடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அறிவியல்படி பொருந்துமா?

எல்லாவற்றையும் கூறிய தோழர் இதனால் தனித்தமிழ்நாட்டு கொள்கையைக் கைவிடுக என்கிறார். இது எப்படி இருக்கின்ற தென்றால் நம்மிடம் நட்புக் கொண்டோ அல்லது பகைமை கொண்டோ நம் இடத்தைக் கைப்பற்றும் ஒருவருக்கு இதோ இந்த இடத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று சிறிது சிறிதாகத் தந்து, பின் முழுவதையும் தந்துவிட்டு தெருவிற்குச் செல்வதைப் போன்றதுதான். தோழர் தம் இடத்தை மாற்றாருக்கு விட்டுக் கொடுப்பாரா? அதைப் போலத் தானே தன்னாடும். இதை எப்படி மாற்றாருக்கு விட்டுக் கொடுக்க முடியும்?

மொழி உணர்வே இல்லை என்பதற்காக நாம் தாய்மொழிக் கல்வியை நிறுத்திவிட முடியுமா? குழந்தை தன்நோய் தீர மருந்தைச் சாப்பிடாது அடம்செய்தால் அதற்காக விட்டு விடுவோமா? பின் குழந்தை என்னாகும்? அதன் உயிர் போனால் பேசுகிறது என்றால் அதற்கு உண்மையிலேயே நாம் பெற்றோர்களா? வீட்டில் தீப் பிடிக்கிறது என்றால் அதை அணைகாமல் விட்டு விடுவோமா? பாடு பட்டாவது அதை அணைக்க வேண்டுமே? இது போலத்தான் நம் நிலமும். இது அடிமைப்பட்டுவிட்டது என்று ஒதுங்கி விட முடியுமா? அதை மீட்டெடுக்க வேண்டியது கடமையன்றோ? யாராவது ஒருவர் முன்வந்தால் தானே முடியும்? யாரும் முன்வரவில்லையென்றால்! எப்படிப்பிரஞ்சுப்புரட்சிதோன்றியது? சீனப்புரட்சி தோன்றியது? உருசியப்புரட்சி தோன்றியது?

உ. த. மு. க. வின் தலையாய கொள்கையே அதுதானே? தலையில்லாமல் உயிரில்லாமல் உடலா? அஃது இயலுமா? எதைவைத்து துணிந்து எழுதினர் தோழர் அகமுடைநம்பி. அறிவாளிகள் இப்படித்தான் எழுதுவார்கள் போலும். பாவலரேறுவின் தென்மொழியால் பயனடைந்த அறிவாளிகளில் தோழரும் ஒருவர் போலும்.

இனம் மீட்சி பெற்றால், நாடு விடுதலை பெற்றால் மொழி தானே செழிக்கும். நம்நாடு விடுதலை யடையாமல் தனித்தமிழ் இயலாது; அதனால் முடியாது. எனவே முதலில் நாட்டு விடுதலையே. பின் மொழி, அவ்விடுதலையால் கிடைக்கும் முதற்பயன். நோயை முழுமையாக அகற்ற வேண்டுமே அன்றி அப்போது மற்றும் வலி தெரியாமல் இருக்க மருந்து சாப்பிடுதல் கூடாது. இது குணமடைய கடுமையான பத்தியம் இருப்பதைப் போன்றது.

எனவே தென்மொழி அன்பர்கட்கு ஒரு வேண்டுகோள். முதலில் இனத்தை, நாட்டை மீட்டெடுங்கள். மொழி தானே அதோடு சேர்ந்து மீட்சி பெறும். எப்படி ஒரு செடியை வேரொடு பெயர்த்தெடுத்தால் அச் செடியின் உறுப்புகள் யாவும் அதோடு சேர்ந்து வருமோ அதைப் போல.

வெறும் மொழிக்காக மட்டுந்தான் தென்மொழி என்றால் அல்லது உ. த. மு க. என்றால் அவை வேண்டவே வேண்டாம். பாவாணர் மொழியை மீட்டார் என்றால் பாவலரேறு நாட்டை மீட்கட்டும்!

அய்யா அவர்கள் ஆய்வு செய்க.

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கொள்கிறோம்.   —அமைச்சர்.

பண்பில் ஒளிர்க !

— கடலூர். மணிமாறன்

நேர்மையும் துணிவும் நிமிர்ந்த சால்பும்
சீர்மையும் கொண்டதே 'தென்மொழி'ப் பாசறை !
உள்ளே பூட்டினும் உடலைச் சிதைக்கினும் !
தெள்ளிய கருத்தைத் திண்ணிதின் இயம்பும் !
கெஞ்சுத லென்பதும் பிறர்செய் கேட்டிற்(கு)
அஞ்சுத லென்பதும் அறியாப் பாடம் !
காலங் காலமாய்க் காட்டிக் கொடுத்தும்
ஞாலம் பழிக்க ஞமலியாய்க் குரைத்தும்
நஞ்சை யுமிழ்ந்தும் நயன்மை இகழ்ந்தும்
வெஞ்சினங் கொண்டும் வெம்பழி யுரைத்தும்
பொழுதைக் கழிக்கும் போக்கற் றோரால்
விழுப்பஞ் சேரா ! விழவும் நேரா !
மதியிழந் தோராய் மானமும் இலராய்ப்
பொதி பொதி யாகப் 'பொதியர்' சிலரோ
அவிழ்த்துக் கொட்டும் அழுக்கு மூட்டைகள்
நவிலற் கொண்ணா நகைப்பிற் குரித்தே !
போர்க்குணங் கொண்ட புலிகள் முன்னர்
ஆர்க்கும் நரிகள் அடங்கிப் போகும் !

விளம்பரம் தேடும் வெற்றோ லங்கள்
களங்கம் சேர்த்துக் கதையை முடிக்கும் !
கோட்டான் குயிலைப் பழிப்பது கொல்லோ ?
ஆட்டம் அறியா மந்திக் கூட்டம்
மயிலை இகழ்ந்தால் மன்பதை சிரிக்கும் !
உயிரினும் மேலாம் ஒண்டமிழ் காப்பதும்
நந்தம் இனத்தை நாட்டை மீட்பதும்
செந்தமிழ் நாட்டார் சீரிய தொண்டாம் !

ஆயிர மாயிரம் அவலம் சுமந்தே
நோயின ரானோர் நுவல்வன யாவும்
எள்ளற் குரியன ! ஏலா தனவாம் !
கொள்ளற் குரியதோ கொள்கைத் தேறல் !
தன்னலச் சார்பும் தகவிலாப் போக்கும்
நன்னய வாழ்வை நல்குவ துண்டோ ?
அழுக்கா றெய்தி அலமரு கின்ற
புழுக்கள் வீணே புலமைச் சுடர்முன்
அழியு மென்பதை அறிந்து
பழித்தல் தவிர்த்துப் பண்பில் ஒளிர்கவே !

நூல்: 'பூங்கொத்து'. (பாடல்கள்)

ஆசிரியர் : வீ. வில்வநாதன்.

வெளியீடு: செல்வராசன் பதிப்பகம், எண். 83, பாசியம் நகர், வெங்களூர்-560021.

பக்கங்கள்: 86. விலை: உருவா 5-50.

நூலாசிரியர் தமது முன்னுரை - மனவிதழில், "இந்நூலில் உள்ள சில பாக்களுக்கு அறிமுகம் உண்டு. ஆனால், எனக்கு இந் நூல் தான் அறிமுகம்" என்று கூறிக் கொள்ளுகின்றார். இதில் இருந்து நூலளவில இந் நூலே அவரது முதல் முயற்சி - கன்னி முயற்சி - என்று அறிய முடிகின்றது.

'மொட்டுகளே' என்ற பகுப்பில் 9பாடல்களும், 'மலர்களே' என்ற பகுப்பில் 15 பாடல்களும், 'வாழ்வின் வடிவங்கள்' என்ற பகுப்பில் 12 பாடல்களும், 'தமிழுணர்வு' என்ற பகுப்பில் 9 பாடல்களும் ஆக 47 பாடல்களால் இந்நூல் 'பூங்கொத்து' கட்டப் பெற்றிருக்கின்றது. பாடல்கள் யாவும் மரபு வழுவா இலக்கண அடிப்படையில் உரிய ஓசை நயத்துடன் வடிக்கப்பட்டுள்ளன.

பிற மொழிச் சொற்களின், ஒலிகளின் கூட்டுக் கலவையாக எழுதப்பெறும் உரைநடையையே மடக்கி மடக்கிப்போட்டு, நீட்டி இதுதான் 'கவிதை!'-'புதுக்கவிதை!!' என்று சொல்லிக் கொள்வார் வரிசையில் வாராமல் நல்ல கட்டமைந்த மரபில் பாடல்கள் எழுதத் துணிந்து பாட்டுத் தொண்டு ஆற்ற வந்திருப்பவர் திரு. வில்வநாதன். மேலும், பொதுவில் பாவலர்கள் எண்சீர் ஆசிரிய மண்டிலத்திலேயே தமது பாடல்களை எழுதுவர். பாவலர் வில்வநாதன் அவர்கள் அருகிவரும் அஃதாவது பாவலர்கள் பிறர் கைக்கு அகப்படா வெண்பா, அகவல், கலிவிருத்தம் இன்ன பிற இலக்கண வடிவங்களில் தமது உணர்ச்சியை வெளிப்பாடாக்கிப் பாடல்கள் தந்துள்ளார் என்பதொன்றே அவரது தகுதியை ஒருபடி உயர்த்திக் காட்டுகிறது.

பாவலர் தனித்தமிழ் ஆர்வலர்; கொள்கையர்; என்டதறிய தம் பெருமை கொள்ளுகிறோம். மொழித் தூய்மையைக் காப்பதில் விழிப்புடனும், அதே நேரத்தில் தம் கருத்துக்கான உணர்ச்சியின்

கூர் மழுங்காச் சொற்களைப் பெய்வதில், கருத்துடனும் இருந்து பாக்கள் யாத்துள்ளார் என்பதை அவரது இந்நூலைப் பயிலுகையில் தெரிந்து கொள்ளும்போது அவரின் தகுதி மேலும் ஒருபடி உயர்ந்து நிற்கிறது.

இந் நூலுக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வாழ்த்துப் பாடல் வழங்கியுள்ளார்கள். அதில்,

"தமிழைத் தீய்க்கும் தகவிலாப் பாக்களை
உமிழும் கொடியவர் உயர்கின்ற நாளில்
உண்மைத் தமிழும் உயிர்ப்பும் கருத்துமாய்த்
திண்மைப் பாக்கள் செழிக்கத் தந்தனன்" என

நூலாசிரியரைப் பற்றிப் பாவலரேறு அவர்கள் கணிக்கின்றார்கள். இஃதொன்றே அவரது செவ்விய பாட்டுத் தகுதிக்குச் சான்று பகரும்.

'பூங்கொத்'தில் பல வேறு வேறு மணங்களை அமிழ்க்கக் கூடிய பல வண்ணங்களிலும் மலர்கள் இருக்கலாம் அன்றோ! அதுபோல் இவரது பூங்கொத்திலும பலவகைக் கருத்துப்பாக்களின் மலர்கள் உள்ளன, இதோ அவற்றுள் ஒன்றிரண்டு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்போல!

"நடையழகு வேண்டுந்தான்; அதற்கு வேண்டி
நமதென்று பாதையெலாம் நடக்க லாமோ?
உடையழகு வேண்டுந்தான்; அதற்கு வேண்டி
உடலெல்லாம் தோன்றிடவே உடுத்த லாமோ?
இடையழகு வேண்டுந்தான்; அதற்கு வேண்டி
இறுக்காடை நாணமின்றி அணிய லாமோ?
உடலழகு வேண்டுந்தான்; அதற்கு வேண்டி
உடலெங்கும் ஒப்பனையே இருக்க லாமோ? (பக்.40)

மூச்சொல், ஓசையொழுங்கு, கருத்துத்தெளிவு பண்பாட்டு நயம், இத்தனையும் இப்பாட்டில் நிறைந்து நமக்குப் பாட்டு இன்பத்தைத் தருகிறது.

"ஏழையாய்த்தான் திரிகின்றேன்;
இழிகுணத்தைப் பெற்றதில்லை!
ஏழையானேன் பணத்தினிலே!
இல்லைஇல்லை மனத்தினிலே!" (பக். 60)

ஏழையாய் இருப்பினும் ஒருவர் மனத்தால், குணத்தால் உயர்வு பெற்றுச் செல்வராய் இருக்கவேண்டும என்பதைப் பாவலர் தம்மை முன்னிலைப்படுத்தி எழுதியுள்ள இப்பாடல் வாயிலாக எவ்வளவு அழகாகக் கூறுகின்றார். படிக்கச் சுவைக்கும் செம்மாப்பு நடை! கண்டு மகிழலாம்.

"மென்மை யுடையவள்; மேன்மை யுடையவள்;
தொன்மை யுடையவள்; தூய்மையோ - டென்றும்
நிலைப்பவள்; நீர்மை யுடையவள் எங்கள்
தலைவி இவள்பேர் தமிழ்" (பக். 70)

இவ்வெண்பாவில் தமிழைத் தலைவியாக்கி, அவளின் தன்மைச் சிறப்புகளை நெறிப்படப் பாடியுள்ள பாவலரின் தமிழுணர்வு மதித்துப் போற்றுதற்குரியது.

பாவலர் இதுபோலவே வாழ்வியலுக்கு வேண்டிய நல்லியல் பண்புகள், சாதிமதத் தீங்குகள், கல்வியின் உயர்வு காலத்தின் அருமை, பெற்றோரின் பெருமை, பழஞ்செல்வம், குடிப்பழக்கம், திரைப் படத்தால் விளையுந் தீங்கு, ஏழ்மைத்தனம் போன்ற பல கூறுகளையும் எடுத்துக்கொண்டு தமக்கே உரிய இனிய, எளிய தமிழ்நடையில் ஆற்றொழுக்காய் எழுதியுள்ளார். பாடல்கள் நல்ல உணர்வோட்டத்தில் அமைந்துள்ளன. பாட்டுணர்வாளர்கள் அன்றிப் பிறரும் இந்நூலை வாங்கிப் படித்து மகிழ்ந்து பயன்பெறலாம்.

தயவு, கஞ்சன், இரவி, அங்கம் போன்ற வடசொற்கள் சில பாடல்களில் வந்து பயின்றுள்ளன. அடுத்த பதிப்பில் அவற்றைக் களைந்து, திருத்தி வெளியிட வேண்டுகிறோம்.

வளரும் பாவலருக்கு எமது வாழ்த்துகள்!

—தேவர்கோ.

வருந்துகிறோம்!

நெடுநாளைய தென்மொழி அன்பரும், தனித் தமிழ் இயக்க ஆர்வலரும், இலண்டன் வாழ் தமிழுணர்வாளர்களின் வழிகாட்டியும் ஆகிய திரு அரங்க முருகையன் அவர்களின் அருமை அன்னையார் திருவாட்டி செல்லம்மாள்-அரங்கசாமி (அகவை 76) அவர்கள் கடந்த 28-1-86 அன்று காலமானார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெருவிக்கிறோம். திரு அரங்க முருகையன் அவர்களுக்கும், அவர் குடும்பத்தினர்க்கும் நம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் — அமைச்சர்

திருச்சித் தென்மொழி அன்பர் மறைவு!

முன்னாளைய தென்மொழி அன்பரும், திருச்சி, கொதிகலன் தொழிலக முதுநிலைப் பொறியாளருமாகிய திரு. பி. பிச்சுமணி அவர்கள், கடந்த 19-2-86 அன்று பகல் மாரடைப்பால் புகழுடம்பு எய்தினார்கள் என்னும் செய்தி கேட்டு வருந்துகிறோம். அவர் குடும்பத்திற்கும், உற்றார்-உறவுக்கும், நட்புக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

—அமைச்சர்

வெற்றி எய்துவோம்!

—பாவலர். தாழை ந. இளவழகன்

செந்தமிழ் நாட்டு மாந்தர்
சிறப்புடன் நாளும் உய்ய
எந்தமிழ் அய்யா! நீவிர்
ஈடிலாத் தொண்டு செய்து
நந்தமிழ் இனமும் நாடும்
நலிவிலா தினிது காக்கச்
சிந்திய பாடல் கோடி!
செழிப்புடன் வாழ்க, நீடே!

முப்பஃது ஆண்டின் மேலாய்
முனைப்பொடு தமிழைக் காக்க
செப்பினீர் கனியின் சாறுறை!
சிறப்பிலார், உண்டார் இல்லை!
தப்பினர் இல்லை துன்பில்!
தனித்தமிழ் காப்பார் இல்லை!
ஒப்புவார் இல்லை! தமிழின்
உணர்வினில் தமிழன் இல்லை!

முக்கனிச் சாறும் விஞ்ச
மொழிந்தநும் உரையும், பாட்டும்,
எக்கணம் எண்ணும போதும்
இருளினை வீழ்த்தும் தானே!
இக்கண மாந்தர் எல்லாம்
இருள்வழிச் செல்வ தாலே
தக்கன ஏற்பார் இன்றித்
தறுதலை ஆனார்; அய்யா!

துன்பமே வாழ்வில் நாளும்
தொடர்கதையாய் வந்த போதும்
இன்பமே தமிழ்தா னென்றீர்!
என்றுமே தமிழுய்ய வாழும்
பண்புசேர் அரிமா நீவிர்!
பைந்தமிழ் மொழியைக் காக்கும்
பண்பிலே தளர்ச்சி இன்றிப்
பாங்குடன் வாழ்வீர் நன்றே!

தன்னவர் நலமே காத்துத்
தமிழ்! தமிழ்! என்று பாடிப்
புன்மையர் நிறைந்த போதும்
பொய்யரே மலிந்த போதும்

கண்ணென மொழியை நாட்டைச்
கருதியே தொண்டு செய்யும்
பண்ணவர் யாரோ ? எங்கள்
பாவல ரேறு நீரே !

ஆரிய நச்சுப் பாம்பின்
ஆட்டமே ஆட்டம் என்று
வீரியத் தமிழன் தானும்
விடுதலை கெட்டுத் துஞ்சி
மாறிடா அடிமை நோயால்
மடிந்திட லானுன் ! இந்நாள்
பேரறி வாளா ! எங்கள்
பெரியவ ! காப்பீர் ! இன்னே !

அஞ்சுதல் இல்லை ! இல்லை !
அயர்ச்சியும் இல்லை ! இல்லை !
கெஞ்சுதல் இல்லை ! வீணே !
கீழ்மையில் வீழ்தல் இல்லை !
துஞ்சுதல் இல்லை ! நாளும்
தனித்தமிழ் காக்க வேண்டிச்
செஞ்சுடர் ஒளியாய் வந்தீர் !
சிறுமையை மாய்த்தீர் வாழ்க !

தனித்தமிழ் நாட்டைக் காண்பீர் !
தகவுடன் உலகோர் போற்ற
தனித்தமிழ் ஈழந் தன்னை
தருக்கரின் பிடியில் நீக்கி
இனிதுநம் இலங்கை மாந்தர்
விடுதலை எய்தி வாழ !
கனியினும் இனிமை சான்ற
கனித்தமிழ் ! காப்பீர் வாழ்க !

(வேறு)

ஆண்டாண்டுக் காலமாய் அடிமையில் வாழ்வதா ?
அரக்கரின் பிடியிலே அகப்பட்டுத் தாழ்வதா ?
கூண்டோடு தமிழ்மாந்தர் குழியிலே ! வீழ்வதா ?
கொடுங்கோலச் சிங்களர் குட்டுக்குப் பணிவதா ?
ஈண்டும்நம் தமிழீழர் இன்னலில் மாள்வதா ?
எத்தர்கள் என்றென்றும் ஏமாற்றிப் பிழைப்பதா ?
வேண்டும்நல் விடுதலை என்றுநாம் முழங்குவோம் !
வீணரை வீழ்த்தியே ! வெற்றிநாம் எய்துவோம் !

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்.

[பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களின் பாவியம்]

உறுப்பினர்: கண்ணையன், கருப்பணன்.

இடம்: தெரு.

நிலை: குடிவெறியில் தள்ளாட்டம்.

கண்: (கருப்பணனைத் தேடிப் போகிருன்.)

கருப்: (குடித்துவிட்டுச் சாலையில் வருகிருன்)

கண்: என்ன அண்ணே, ஒரே தள்ளாட்டம்?

கருப்: யாரடா இவன் குறுக்கில் வருகிருன்.

கண்: அண்ணே, நான்தான் கண்ணையன்

கருப்: வா-வா, கள்ளுக் கடைக்கா?

கண்: இல்லை அண்ணே, உன்னைத்தான் பார்க்கிறேன்.

கருப்: சரி நன்ருகப் பார். கண்ணையா இப்போதுதான் நம் அமைச்சர்கள் என் கண்ணுக்குத் தெரிகிருர்கள்.

கண்: அப்படியா! அண்ணே, நீ தள்ளாடுவதைப் பார்த்தால், உன்னைப் பார்க்காமலே போய்விடலாம் போலிருக்கிறது.

கருப்: போகவேண்டாம். கண்ணையா கொஞ்சம் என்னைக் கைத் தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வா. வீட்டிற்குப் போய் விடுவோம்.

கண்: (கருப்பணனைக் கையில் பிடித்துக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்)

கருப்: (திண்ணையில் அமர்ந்து) என்ன கண்ணையா? என்ன செய்தி?

கண்: அண்ணே, உனக்கு அந்தப் பூக்காரியைத் தெரியுமா?

கருப்: பூக்காரியா! எத்தனையோ பூக்காரி உண்டேடா? நீ யாரைக் கேட்கிருய்?

கண்: குடிசை வீட்டுக் கிழவர் பெயர்த்தி!

கருப்: விளக்கமாய்ச் சொல், நினைத்துப் பார்க்கிறேன்.

கண்: அவரைக் கொடி போன்ற உருவம், அழகு நிலா போன்ற மின் முகம். நடக்கையில் இடை ஒடியுமோ என்ற ஐயந்தரும், உடுக்கை இடை; காலைத்தொடும் குழல்; கண்டவரை நோய் செய்து அதுவே மருந்தாக அமையும்; காந்தக் கண்கள் அழகான ஓவியம்; அவள் கதை படிக்க ஓர் இன்சுவைப்

பாவியம். அவளைத்தான் பூக்காரி எனத் தெருவில் அழைப்பர். பெயர் வள்ளி.

கருப்: (ஓங்கிச் சிரித்து) அடேயப்பா! அவளா! அந்தக் கிழவன் பெயர்த்தி என்று சொல். ஏ, கண்ணையா, கேட்கிறாயா அவள் கதையை.

கண்: அவள் கதை உன்னிடமும் உள்ளதா? சரி-சரி சொல்லண்ணே!

கருப்: ஒருநாள் நல்லமழை. நான் நம்முடைய தனிக் குடிலுக்குள் குடித்த மயக்கத்தால் உறங்குவதுபோல உறங்காமல் இருந்தேன். நீ சொன்ன அந்தப் பூக்காரி மழையில் நம் குடிலில் ஒதுங்கினாள். குடிலின் வெளித் திண்ணையில் நான் கண்டேன். விரைந்து பிடித்தேன். வீட்டிற்குள் கொண்டு வந்தேன். அவளின் இன்பத் துய்க்கத் துடித்தேன். அவள் துவண்டாள். என்னைத் தடுத்தாள்.

கண்: விட்டு விட்டாயோ?

கருப்: விடுவேனா. ஓரே பிடி, கண்டுப்பிடி போட்டேன். அவள் அலறினாள். அடுத்த நாள் வருவதாய் மெய் உரைத்தாள். ஏமாற்றினாள். வீட்டிற்கு விலக்கென்றாள்! அந் நேரத்தில் நண்பன் ஒருவனும் வந்து சேர்ந்தான். என்ன செய்குவது. அடுத்த நாள் வந்து சேரென்று விடுதலை செய்தேன்.

கண்: வந்தாளா?

கருப்: இன்னும் வரவில்லை, ஒரு நாளைக்கு இழுத்துக்கொண்டு வருவேன்.

கண்: அண்ணே! அவள் வரமாட்டாள்.

கருப்: ஏன்? எதற்காக? அவள் விருப்பித்தானா? நான் நினைத்தால் வந்துதானாக வேண்டும்!

கண்: அதாவது நேற்றிரவு ஓராணோடு ஆடிய ஆட்டத்தை எப்படி நண்ணே சொல்லுவது!

கருப்: பார்த்ததைச் சொல் கண்ணையா!

கண்: காத்திருந்தான் ஓர் காளை; அந்தக் கன்னி வள்ளி வந்தாள். அவன் அவளை கைப்பிடித்திழுத்தான்; அவள் கன்னத்தில் ஒரு முத்தத்தை வைத்தான். வாடா மலரே! என்னைக் கூடுக என்றான்.

கருப்: இவ்வளவுதானே?

கண்: கேள் அண்ணே! சூடேற்றிய பால் குளிரும் வரைப் பொறுத்திருக்கா விட்டால், குடித்ததும் நாசி சுடும் அத்தான் என்றாள். தேன் கூடே உன் இதழில் ஊறும் தேன், தேவையென்றான் அவன். அப்படியா அத்தான், அதில் ஊறிய கள் உங்களுக்குத்தான் என்று நீட்டினாள் இதழ்களை; அவ்வளவுதான். அடடா, அவர்கள் இரண்டு பேரும்

கொஞ்சியதைக் கண்டு நான் கண்ணை மூடிக்கொண்டேன்' அல்லாக்கால், மயக்கம் எனக்கும் வந்திருக்கும்

கருப்: அப்படியா ? அதன்பின் நடந்தது ?

கண்: இருவரும் பிரிந்து போய்விட்டார்கள். அண்ணே நாம் எப்படியும் அவளை அடைந்தே தீரவேண்டும்

கருப்: ஆமாம்! தம்பி, கண்ணையா ! அவளை எங்கு கண்டாலும் உடன் வந்து என்னிடம் கூறு. போய் அவளைத் தூக்கி வருவோம்.

கண்: அவ்வளவு எளிதாக அவளைத் தூக்கி வர இயலாதே !

கருப்: ஏன் ?

கண்: அப்பவே சொன்னேன், அல்லவா ! அவளுக்கொரு காதலன் உள்ளான், பெயர் சிங்கன் !

கருப்: சிங்கம் என்றால் என்ன ? கரடியாக இருந்தால்தான் என்ன ? அவனைக் கொன்று போட்டுவிட்டு, அவளைத் தூக்கி வருவேன்

கண்: அண்ணே ! அவளவனோடு தோட்டக் கோடியில் காதலாட்டம் ஆடி, பின் பிரிந்தவர், நாளை சந்திப்போம் எனக் கூறினர். நாளை அவ்விடம் தேடி வருவர். நாம் அங்கே போனால் காணலாம்.

கருப்: அப்படியா ? ஒன்று செய் நீ, நாளை அங்கு மறைந்து கவனி. அவரிருவரும் சந்தித்தவுடன் என்னிடம் வந்து சொல்லி விடு. நாம் அங்கு போய் ஒரு கை பார்ப்போம்.

கண்: சரியண்ணே ! என்னை எதிர்பார்த்துக் கொண்டிரு. நான் வருவேன். வணக்கம். (போய்விட்டான்)

காட்சி கரு.

உறுப்பினர்: 1. கிழவர், 2. வள்ளி

காலம்: பிற்பகல்

நிலை: கிழவர் பூக்களை விற்றுவிட்டு, வீட்டிற்கு வருகிறார்

கிழவர்: (பூக் குடலையுடன் வருகிறார்) வள்ளி ! (கதவைத் தட்டுகிறார்)

வள்ளி: தாத்தா, இதோ வந்துவிட்டேன் (குடிலின் கதவைத் திறக்கிறாள்)

கிழ: (குடலையைத் தரையில் வைத்துக்கொண்டே) இன்று சரியான அலைச்சல். மலர் விற்பனை மந்தம்.

வள்: அப்படியா ! தாத்தா, தண்ணீர் கொண்டு வரட்டுமா ?

கிழ: கொண்டு வா (அமர்ந்து கொண்டே) சே! என்ன நாடோ! இது. விழுந்தவன் எழுந்து வர ஒரு வழியும் இல்லை. என்

சிறப்பு மடல்!

கருநாடக அன்பரின் கவலை மடல்!

அன்புடையீர்! வணக்கம். அகம் நொந்து இம்மடல் வரைகின்றேன். எங்கள், அரசு வைப்பகத்தில் (State Bank of India) கருநாடகத் தமிழர்களுக்கு எதிராக நடந்துக்கொண்டிருக்கும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமன்று. எல்லாவகையிலும் வெளிப்படையாகவே தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். மாநில அலுவலகங்களில் மட்டுமல்லாமல், தேசிய ஒருமைப்பாட்டை வாய்வலிக்க ஓயாமல் கத்திக்கொண்டிருக்கும் நடுவணரசு அலுவலகங்களில் கூட கருநாடகத் தமிழர்கள் புறக்கணிக்கப் படுகின்றனர். இதைத் தட்டிக்கேட்க ஆளில்லை. தமிழர்கள் எந்தத் தேசியக் கட்சிகளில் மாடாய் உழைததாலும்கூட இந்த நிலைதான்.

வென்னமோ பேசுகிறார்கள். பால் பொங்கும் நாடு, காடு செறிந்த நாடு, ஆறுகள் ஓடுகின்ற நாடு, சோறு குவிந்த நாடு, காயும், கனியும் கணக்கின்றி தரும் நாடு எனப் பேசுகிறார்கள். குடிக்க, கள் இருக்கிறதே தவிர கஞ்சிகூட இல்லை. நேர் கோடு, குறுக்குக் கோடு, வட்டக்கோடு என்றுதான் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இங்கே என்னடா என்றால், வறுமைக் கோடு என்ற ஒரு புதுக்கோட்டைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறார்கள். அந்தக்கோடு இந்த செழித்த நாட்டிற்கு மட்டும் எப்படி வந்ததோ தெரியவில்லை.

வன்: என்ன தாத்தா, என்னவெல்லாமோ பேசுகிறீர்கள்?

கிழ: இந்த நாட்டின் நிலைமை எண்ணிப் பார்க்கிறேன்.

வன்: நாம் நினைத்து என்ன பயன்? இந் நாட்டை ஆளுபவர்கள் அல்லவா, நினைத்துப் பார்க்கவேண்டும்.

கிழ: அவர்கள் நினைச்சுப் பார்த்துத்தான் நீங்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருக்கிறீர்கள் என சொல்லிவிட்டார்கள்.

வன்: அவர்களை மீட்டெடுக்க ஏதாவது வழி செய்திருக்கிறார்களா?

கிழ: செய்திருக்கிறார்களே! உனக்குத் தெரியாதா? பரிசுச்சீட்டு வாங்கவேண்டும் என்று அரசு நாள் தவறாமல் பறை சாற்றுகிறதே.

வன்: பணப் பற்றுள்ளவன் நாட்டை ஆண்டால் அப்படிதான் ஆகும். அது கிடக்கட்டும். நாங்கள் ஏன்? அந்தக் கோட்டுக்குக் கீழிருக்கிறோம் எனக் கேட்கவில்லையா?

கிழ: கேட்டால் அது உங்கள் விதியென்று சொல்லுகிறார்களே!

(தொடரும்)

இங்கு நடந்து கொண்டிருக்கும் கொடுமைகளுக்குச் சான்றாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன்,

எங்கள் வைப்பகத்தில் (State Bank of India) (வெங்காலூர் வட்டம்) தற்காலிகக் கடைநிலை ஊழியர்கள் ஏறக்குறைய முந்நூறு பேர்கள பணியாற்றிக் கொண்டிருந்தனர். இவர்களில் பெரும் பாலோர் வேலை வாய்ப்புக்காக நாயாய் அலைந்து கொண்டிருக்கும் தமிழர்கள்.

தற்காலிக ஊழியர்களைப் பணி அமர்த்தம் செய்வதற்கான கட்டளை பிறப்பித்துச் சுற்றறிக்கை வந்தது. ஆனால், கன்னட அதிகாரிகள் அதை முறையாகக் கடைப்பிடிக்காமல் கரவு எண்ணத் துடன் வேண்டுமென்றே தட்டிக் கழித்துவிட்டனர். பணி நீக்கம் செய்யப்பட்ட கடைநிலை ஊழியர்கள் போராடி வெற்றியும் பெற்ற னர். ஆனால் நடந்ததோ வேறு.

கன்னடர்களுக்கு மட்டும் வேலை தந்துவிட்டுத் தமி ழர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டனர். காரணம் கேட்டதற்குத் "தமிழர்களுக்கு இங்கு வேலை இல்லை" என்று 'ச்சை'யாகவே கூறிவிட்டனர். இப்போது இந்த வழக்கு முறை (நீதி)மன்றத்திற்குப் போயிருக்கிறது. தீர்ப்பு வழங்க எத்தனைக் காலம் ஆகுமென்று உறுதியாகச் சொல்லமுடியாது. ஒரு கால் அவர்களின் பேரப் பிள்ளைகள் கூலி வேலை செய்து கொண் டிருக்கும்போது வந்தாலும் வரலாம்.

பார்த்தீர்களா....இந்தக் கொடுமையை? இதுபோன்ற நிகழ்ச்சி தமிழ் நாட்டில் என்றாவது நடந்தது உண்டா ?

இந்த நிகழ்ச்சியைக் குறித்துத் தமிழக அரசிற்கும், நடுவண் அரசிற்கும் பல மடல்கள் வரைந்தும் இதுவரை எந்தம் பயனும் விளையவில்லை.

வரண்ட நிலங்களைத் தம்முடைய வெயர்வையைப் பாய்ச்சி வள நிலமாக்கிய தமிழர்களுக்கு வரவேற்பைப் பார்த்தீர்களா !

அடுத்து, இன்னொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட விரும்பு கின்றேன்.

கருநாடக மாநிலப் போக்குவரத்துக் கழகத்தில் (K.S.R.T.C.) மேலதிகாரி ஒருவர்க்குத் தமிழன்பர் ஒருவர் தனிச்செயலாளராகப் பணியாற்றி வருகின்றார். அதிகாரியும், நம்முடைய தனித்தமிழ் அன்பர் ஒருவரும் மிகமிக நெருங்கிய - இணைபிரியா நண்பர்கள். ஒருமுறை அன்பர் தம் அளிய(மைத்துன)ருக்குப் பணி அமர்த்தம் பெற அந்த மேலதிகாரியிடம் முறையிட்டார். ஆனால். அந்த அதிகாரி 'தமிழர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது'என மேலிடத்தி

லிருந்து, சுற்றறிக்கை வந்துள்ளதால் தம்மால் அதை மீறி எதை யும் செய்யமுடியாது" என்று கூறி மறுத்துவிட்டார். அவர் மனம் வைத்தால் உறுதியாகச்செய்திருக்கமுடியும். ஆனால், செய்ய முன்வரவில்லை. மேலதிகாரி ஒருவருக்கு நல்ல, நம்பிக்கையுள்ள நண்பராக இருந்தும், தனிச் செயலாளராக இருந்தும் அவரால் உதவி பெற முடியாமல் போயிற்று.

இது எதைக் காட்டுகிறது? கன்னடர்களுக்கு மொழி, இனப் பற்று எவ்வளவு இருக்கிறது என்பதைத்தானே?

அந்த எண்ணம் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களுக்கு ஏன் இல்லாமல் போயிற்று?

எல்லா மாநிலங்களும் அசாமாகவும், பஞ்சாபாகவும் இருக்கும் போது, தமிழ்நாடு மட்டும் ஏன் பாரத நாடாக இருக்கவேண்டும்? எண்ணிப் பாருங்கள் !!

தேசியம் பேசிக் கொண்டிருக்கும் தரங்கெட்ட தமிழர்களுக்கு இது கவலையில்லாமல் இருக்கலாம். அவர்களிடம் தன்மானத்தை யும், தமிழ் மானத்தையும் எதிர்பார்ப்பது மடமைதான். ஆனால், தமிழ், தமிழர் என்று மூச்சுக்கொரு முறை மேடைகளில் முழங்கித் தம்பட்டமடித்துக் கொண்டிருக்கும் 'திராவிட' இயக்கத் தலைவர்க ளிடம் தமிழ் மானத்தை எதிர்பார்ப்பது தவறில்லையே..., ஆனால், அவர்களிடங்கூட அது இல்லையே......

"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்" என்று தமிழ் முழக்கம் செய்த பாவேந்தரையே ...எச்சில் பணத்திற்கும், இழிந்த பதவிக்கும் மறந்துவிட்டார் களே...என்று எண்ணிப் பார்க்கும்போது உண்மைத் தமிழர் உள் ளங்கள் எந்த அளவிற்குக் குமுறிக் கொண்டிருக்கின்றன.

திரைப்பட அரங்கில் ஒன்றுகூடித் தங்களுக்குத் 'தலைவனை ஏற்றுக் கொள்ளும் தரங்கெட்ட கொள்கைக்கு அடிமையாக்கப்பட்ட தற்குறித்தமிழர்கள் பெரும்பான்மையினராக இருப்பதால், தேர்தல் நேரத்தில் ஓட்டுப்போலை அறுவடை செய்வதற்காகத் "தமிழ் வீரம்" பேசுகின்ற போலி முத்துகள்தாம் இன்று அமைச்சராக முடிகிறது. தமிழுணர்வும், தமிழ் இனவுணர்வும் உள்ளவர்கள் தேர்தலில் நிற் கக்கூடக்கட்சிகளில் தகுதியில்லாதவர்களாகக் கருதப்படுகின்றார் கள். இந்த இழிநிலை உலகில் வேறு எந்த நாட்டிலுமில்லை.

'புரட்சி' என்னும் புனிதமான 'வீரச்சொல்'லுக்குப் பொருள் சரியாகப் புரிந்துக் கொள்ளாதவர்கள் கண்ட கண்ட போலிகளுக்குப் பெயரிட்டுப் போற்றிப் பணத்திற்கும், பதவிக்கும் அடிபணிந்து வாழ்கின்ற அரை வேக்காட்டு அரசியல் வாணர்களை நம்பும் தமிழர்

தனித்தமிழராய்ச் செய்குவோமே!

—(புலவர் ப. எழில்வாணன், க.மு., கல்.இ.)

வீடெல்லாம் தெருவெல்லாம் ஊரெல்லாம்
வினைசெய்யும் இடமெல்லாம் வண்டமிழாம்,
ஏடெல்லாம் சொல்லெல்லாம் எழுத்தெல்லாம்
எடுக்கின்ற பொருளெல்லாம் எந்தமிழாய்க்,
காடெல்லாம் வயலெல்லாம் மலையெல்லாம்
காண்கின்ற வினைவெல்லாம் பெயர்தமிழாய்,
நாடெல்லாம் பொழுதெல்லாம் நாவெல்லாம்
நவையில்லாத் தமிழாய்நாம் செய்குவோமே! 1

உலகெல்லாம் கலையெல்லாம் ஆய்வெல்லாம்
உழைப்போரின் மனமெல்லாம் ஒண்டமிழாய்,
அளவெல்லாம் உடையெல்லாம் பொருளெல்லாம்
ஆள்கின்ற பொறியெல்லாம் பெயர்தமிழாய்
அழகெல்லாம் நலமெல்லாம் திறனெல்லாம்
அவையன்றிப் பண்பெல்லாம் தனித்தமிழாய்
உளமெல்லாம் நினைவெல்லாம் நரம்பெல்லாம்
ஒழிவில்லாத் தமிழாய்நாம் செய்குவோமே! 2

கடலெல்லாம் வானெல்லாம் கானெல்லாம்
கடக்கின்ற ஒளியெல்லாம் கனித்தமிழாய்
மடலெல்லாம் உறவெல்லாம் உணர்வெல்லாம்
மணக்கின்ற பாவெல்லாம் செந்தமிழாய்
அடலெல்லாம் அறிவெல்லாம் விழைவெல்லாம்
அன்பூட்டும் அருளெல்லாம் அருந்தமிழாய்த்
திடமெல்லாம் ஆட்டெல்லாம் மறமெல்லாம்
தீதில்லாத் தமிழாய்நாம் செய்குவோமே!

கள் இருக்கும்வரை இப்படித்தான் இந்த இழிநிலை நீடித்து தமிழ் நாடு தாழ்ந்து கொண்டிருக்கும்.

'தேசியம்' பேசியே தேய்ந்துபோன தமிழர்களுக்குத் தெளிவு பிறக்க வழியில்லையா? பாவேந்தர் புகட்டி-நாம் பெற்ற தமிழ் உணர்வுகளை மங்கவைத்துக் கொண்டிருக்கும் மானங்கெட்ட அரசியல் வாணர்களை நம்பி இன்னும் எத்துணைக் காலத்திற்குத்தான் தாழ்ந்து கொண்டிருப்பது?

செந்தமிழ் நாட்டைச் சிறைப்படுத்தும் மாற்றார் கருத்துகளுக்கு இன்னும் நாம் அடிமையாக இருக்கவேண்டுமா? விடியலை நோக்கிப் புறப்படும் வேளை நமக்கு வரவில்லையா? பிறந்து உண்டு இருட்டில் வாழும் இழிநிலை நமக்குத் தகுமா? எண்ணிப்பாருங்கள்!

இங்ஙன், சி. பூ. மணி, வெங்காளூர்-21.

கள், இலக்கியவாணர்கள் பற்றிக் குறிப்புரைகள் உள்ளன. அதில் பாவலர்கள் கண்ணதாசன், நா. காமராசன், அப்துல் ரகுமான் (பக்கம் 343) மேத்தா 352.

உரை நடையாளர்கள்: செயகாந்தன், செகசிற்பியன், சாண்டில்யன், சிவசங்கரி (348). பயணக்கதை: மணியன், இதயம் சாவி [411]. தாளிகைகள்: தினமணி [411), தினகரன் [411 தினத்தந்தி [412], ஆனந்தவிகடன், ராணி [413] குமுதம் [414], தினமணிக் கதிர், குங்குமம், பங்கை, துக்ளக் [414, மஞ்சரி, தாமரை [415], கணையாழி, ராணிமுத்து, மாலைமதி ஆகியன இலக்கியத்திற்காக ஆற்றிய தொண்டுகள் மறவாமல், பெயர் குறிப்பிட்டு, ஆசிரியர் தம் முதுகில் தட்டிக்கொண்டது தெரிந்து மிக்க மகிழ்வடைந்தோம். தமிழில் இதுபோன்ற நூல்கள் மேலும் பல வந்து இப்படிப்பட்ட இலக்கிய வரலாற்றைப் பறையடித்துக் கொண்டு, தமிழ் வளர்த்து, ஊண் பெருகும்படி, உணர்வு பெருகும் படி நாம் எல்லாரும் வாழ்த்துவோம்.

நிற்க, மேற்கண்ட இதழ்களில் வளரும் இலக்கியத்தை விட, செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், தென்மொழி, தமிழ்ப்பணி, குறளியம் ஆகியன பொருளியலில் தாழ்ந்திருக்கலாம். ஆகையால், நூலாசிரியரின கண்ணுடி அல்லது கண்ணுக்குக் கட்டுப்படாது போயிருக்கும். மொழிஞாயிறு பாவாணர், ப. சுந்தரேசனார் [இசைத் தமிழ்ப் பகுதி] வ. சுப்பையா பிள்ளை, பெருஞ்சித்திரனார் ஐயா. பேரா. மதிவாணனார், 'சைனரின் தமிழிலக்கிய நன்கொடை' ஆசிரியர், க. ப. அறவாணனார், குன்றக்குடி அடிகளார் போலும் பெருமக்கள், நூலாசிரியரின் பார்வையில் படாது போனது ஆசிரியர் குற்றமன்று; அச்சுக் கோப்பாளர் கவனக் குறைவாகயிருக்கலாம். [நூல் முகவரியில் இலயோலாக் குடியிருப்பு எனக் குறித்துள்ளதால் நூலாசிரியர் இலயோலா கல்லூரியில் பணி புரிவர் என்று எண்ணுகிறேன். அவ்வாறாயின், அங்கு க. ப. அறவாணன் என்னும் பேராசிரியர் ஒருவர் உள்ளார் என்பதையும், அவரின் நூல்களையும் அறிந்திருக்க முடியும் என எண்ணுகிறேன்.]

தற்கால இலககிய வரலாற்றைப் பொருத்தவரை, செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி தவிர்த்து இதழ்களையோ, மொழிப் பேராசான் பாவாணர் அவர்களின் பெயரை மறைத்தோ எழுதுவதால் பொருட் சாய்கால் உண்டெனின் கொள்ளட்டும். ஆனால, அஃது இலக்கிய வரலாறு என்னுந் தலைப்பு பொருந்தாது எனபதே என் எண்ணம்.

பல்வேறு நூலாசிரியரின் படைப்புகளைப் பட்டியலிட்டுக் காட்டித் தம் திறமையைக் காட்டி எழுதியுள்ளார் ஆனால், பாவாணர் என்னும் பெயரோ, அவர் எழுதிய நூல்களுள் ஒன்றேனு இவரின் பெருந் தன்மைக்குக் கிட்டாது விலகிச் சென்றதையோ, நூற்றாசிரியம், ஐயை, கொய்யாக்கனி ஆகியன இலக்கியத்திற்கு அழிவு காட்டுமென நூலாசிரியர் கருத்துரைப்பின் அந்நூலை மகிழ்வுடன் ஏற்பேன். இவர்களின் படைப்புகளில் உள்ள குறைகள் பாரீர்! எனப் பட்டியல் காட்டினால் ஏற்பேன். ஆனால், அதுபற்றிக் குறிப்பிடவில்லை என்பதே என் ஏக்கம். ஒருவேளை, எழுத மனமிருந்தும், நூலகத்திற்கு வைக்கவேண்டும் என்பதால் கவனமாக மறந்திருப்பாரோ எனவும் எண்ணுகிறேன்.

நிறைவாக, இதுபோலும் நூல்களை எத்தனைப்பேர் எடுத்துப் படிக்கிறார்கள் என்பது, நூலகர்களுக்குத் தெரியும். தமிழக இலக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

கிய வாழ்வின் கடந்த இருபத்தாறாண்டுகளைத் "தென்மொழி" வளர்த்துள்ளது என்பதையும், நாற்பதாண்டுகளினும் மேலாகப் பாவாணர் பயன்படுத்தினர் என்பதையும் இனிமேல் இதுபோல் இலக்கிய வரலாறு எழுதப் போந்த பேராசிரியர்கள் நினைவுகொள்ளு மாறு அருள்கனியத் தமிழ்த்தாயை இறைஞ்சுகிறேன். ஒரு பார்ப் பணன் கூட, பாவாணரை இருட்டடிப்புச் செய்ய இயலாத அளவு அவரின் பணி தலையாயது என்பது என் தாழ்மையான எண்ணம்.

— க. கதிர்குன்றன், அமரர்பூண்டி.

0 : 1158 :

தமிழ்மொழி காத்துநல் தரத்தினை உயர்த்திடத்
தண்டமிழ் அருளியார் வந்தார்!
அமிழ்தெனும் தமிழ்மொழி வேர்ச்சொல் ஆய்வர்
அமர்த்தமோ தமிழர்க்கே எழுச்சி!
உமிழ்கின்ற செந்தமிழ் ஒளிவிட்டு ஓங்கிட
உயரிய தொண்டிற்கு அருளியே
கமழும் தமிழிற்குக் காவலாய் நிற்பவர்
கற்கண்டு செங்தேன் அருளியார்.
வாழ்க அருளி! வெல்க அவர் தொண்டு!!

—பெ. கோவி. இளஞ்சேரன், சென்னை-44.

0 : 1159 : அன்புடையீர்! போக்கற்ற சிற்றூர்ப்புற மக்களுக்குத் திரைப்படமும், கோயிலுமே கதி. என் தமிழினத்தைக் கட்டி வலுவுள்ளதாக்க வழி தோன்றவில்லை. சாலையார் கடிதம், என் கடிதம் 'தென்மொழி'யில் பார்த்து மகிழ்ந்தேன். நன்றி. ஆனால், நாட்டு மக்கள் நிலையெண்ணி நைந்தேன். சற்று அறிவுள்ள கலப்பட இனத்தார். அறிவற்ற தமிழ் இன மக்கள் ஐந்து, பத்துக்கு அடித்துக்கொண்டு, எரிநரு (சாராயம்), சாப்பாடு, திரைப்படம், பரிசுச் சீட்டில் கெட்டழிவதைப் பற்றிக் கவலையற்று அவர்களைச் சுரண்டித் தம் வாழ்வில் முனைப்பாக இருக்கின்றனர். வசதி வாய்ப்புள்ள தமிழர்களும் அவர் பின்னேயே ஓடுகின்றனர். தமிழினம், திரைப்படம்-மதுவில் அழிவதைப் பற்றி அவர்கள் யாருக்கும் கவலையில்லை. மற்ற இனத்தவரைப் பற்றியோ சொல்லவே தேவையில்லை. கடை வீதியை மற்றுமுள்ள தொழில்களைப் பிடித்துக் கொள்கின்றனர். அவர்கள் அடித்துக்கொண்டு போவதிலேயே குறியாய் உள்ளனர். நடுவண், மாநில அரசு ஆதரவு இருக்கும் வரை இங்கேயே இருக்கலாம் என்கின்றனர். தமிழினத்திடம் ஒற்றுமையில்லை; பணமுமில்லை. எப்படி உருப்படும்? ஏழை மக்களை மயக்க திரைப்படம்! படித்தவர்களை மயக்க கவர்ச்சி இதழ்கள்...!

- ஓர் அன்பர், சென்னை-1.

0 : 1160 : அன்பார்ந்த ஐயா, நடுவண் அரசு நம்மீது கவனம் செலுத்தத் தொடர்ந்துவிட்டது. எனவே, நாம் முன்னைவிட அதிக எச்சரிக்கையுடனும், அதிக விரைவாகவும் செயலாற்ற வேண்டும்! தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தமிழ் நெஞ்சங்கள் என்றும் துணை நிற்கும். இவண், தங்கள் அன்புள்ள,

— உ. காளிமுத்து, சென்னை-78.

தென்மொழியின் அச்சகம், சென்னை-600 005. (கமிமகம்)

நமக்கு வந்த மடல்கள்.

0:1161 மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.....நிரம்ப எழுதவும், பேசவும் மிகவிருப்பம். நான் சென்னை வந்தபோது காரி, ஞாயிறு வாய்ப்பாக அமையாததால் தங்களைக் காண இயலவில்லை. மன்னியுங்கள்.,..அரசும் மக்களும் அழிவு நோக்கிச் செல்கிறார்கள். நமது இனம், நாயினும் இழிவாக ஒன்றை ஒன்று கடித்துக் குதறி இழிந்து அலைகிறது. நாட்டை, மக்கள் இனத்தைக் காக்க முடியுமா? மொழி அழியாது நிலைக்குமா? என்றெல்லாம் எண்ணுகிறேன். இந்தத் தலைமுறை ஏமாறினால், இனி வாழ்வே இல்லை. உங்களை-கலைஞரை எதிர்நோக்கியுள்ளோம்.வணக்கம்.

-தெ. சாலமோன்ராசு, விருதுநகர்1.

0:1162: அன்பு நிறைந்த ஐயா, வணக்கம்! இருள்பட்டுக் கிடக்கும் தமிழுணர்வை உலகம் உவக்க ஒளியூட்டி எழுப்பிட அயலகச் சுற்றுச் செலவினை மேற்கொண்டு, இனிதே நாடு திரும்பிய நீங்கள் எல்லா நலமும் பெற்று உலகநாடுகள் அனைத்தும் போற்ற தனித் தமிழ்த் தொண்டு செய்து கொண்டே இருக்க தமிழன்னை அருள்வாளாக!

இன்று தமிழினம்சிறுமை பெற்றுச் சிதைவதையும், ஒற்றுமை இன்றி அழிவதையும், எட்டப்பச் செயலால் இழிநிலை எய்துவதையும்,மடமையால் மங்குவதையும், பசியாலும்,வேலையின்மையாலும் வேலையிருப்பின் மது, மாது. சூது இவற்றால் அழிவதையும், இதனினும் மேலாக இந்தியைப் புகுத்தும் நடுவண் அரசுக்கு வால் பிடிப்பதையும் எண்ணும்போது நெஞ்சம் துன்புறுகின்றது.

இவை யாவையும் தன்னகத்தே இருத்திக் கொண்டு அரிமாவாய் வீறுநடை போடும், எழுதும், செயலாற்றும் தங்களைப் போற்றாமல், வாழ்த்தாமல், எப்படி இருக்க இயலும்? இன்று எத்தனைக் கயவர்கள் எப்படி, எப்படித் தப்புக் கணக்குப் போட்டு, உங்களை வீழ்த்த நினைத்தாலும், தங்களின் புகழ் ஓங்கவே செய்யும். நீங்கள் நடமாடும் ''திருவள்ளுவர்''. இஃதை உணராத தற்பெருமை கொண்ட எத்தர்களின் பேச்சும், எழுத்தும், தங்களுக்குத் தங்களின் புகழுக்குத் தாழ்வு செய்ய இயலாது! வாய்மையே வெல்லும்.

தங்களன்புள்ள, தென்மொழித் தொண்டன்,
-பாவலர். தாழை ந. இளவழகன், மணப்பாறை.

0:1163: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா, அவர்களுக்கு வணக்கம். தென்மொழி சுவடி 20, ஓலை 6 இல், 'நான்கு எருதுகளும், ஓர் அரிமாவும்' என்னும் கதை மூலம் எடுத்துக் காட்டிய கனிவும், அதன் நோக்கில் விடுதலைப் போராளிகள் உள்ளனர் என்பதை நினைவுபடுத்தியுள்ள பாங்கும் உயர் தன்மையைப் புகட்டுகின்றன.

தமிழன் என்று சொல்கிறபோதே, அகராதியில் ஒற்றுமையில்லை என்பதைத் தெளிவுறுத்துகிற வகையில், பண்டைய காலந் தொட்டு இற்றை நாள்வரை, நடைமுறைப் போக்காக அமைந்

(தொடர்ச்சி அட்டை 3 ஆம் பக்கம் பார்க்க)